பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 3	ஞாயிறு 8-10-39 பிரமாதி௵ புரட்டாசி௴ 22௳	முத்து 2

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
புயற் காற்று	... ...	34
குறிப்பு	... ...	36
செய்தித் தொடர்	... ...	38
ஆசிரியரின் கடிதம்	... ...	39
ஸுபாஷிதம்	... ... ரா. ரா.	41
மரியாதை செய்தல்	... ஏ. என். கலியாணசுந்திரம்	43
ஸ்டாலின் கொள்கை	... ... த. கிருஷ்ணமூர்த்தி	45
எங்களூர் கிருஷ்ணய்யர்	... ... மௌலி	49
சுத்த எருமை மாட்டுப் பயல்	... ... கே. வி. வி.	51
ரகு	... ... வி. ஸி. செல்லப்பா	53
விஞ்ஞானமும் நந்தேச மொழிகளும்	கே. சீனிவாசகிருஷ்ணன்	55
மரியாதை செய்தல் (பாகம் 2)	... ஏ. என். கலியாணசுந்திரம்	57
சிறுவர் பகுதி	... சி. லக்ஷ்மிநாராயணன், பி.ஏ.	59
மளிகைக்கடை மாணிக்கம் செட்டி	... ... ஜி. பாலசுப்ரமண்யம்	61
வலை வீச்சு	... ...	64

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல,



புயற் காற்று

புயல் காற்று அடித்தால் சில சமயம் மழை பெய்வதும் உண்டு—நாம் புண்ணியம் செய்திருந்தால். அல்லது மண்ணையும் கல்லையும் வாரி இறைத்து, சாலைகளிலுள்ள மரங்களை வேரோடு பிடுங்கித் தள்ளிச்சாலைகளில்கொஞ்சகாலம் போக்குவரத்தே இல்லாமல் செய்துவிடுவதுமுண்டு. மகா யுத்தங்களும் அப்படியேதான்! 1914ம் வருஷத்தில் நடந்த யுத்தம் மண்மாரி யுத்தமாகவே முடிந்துவிட்டது. 20 வருஷகாலமாக ஐரோப்பாவில் புரட்சியும் கிளர்ச்சியும்தான். உலகத்தில் ஒரே ஏக்கம். அல்லது தூக்கம். எந்தக் காரியமும் நடைபெறுவதில்லை. 1939ம் வருஷத்தில் வீச ஆரம்பித்திருக்கும் இந்த யுத்தப் புயற்காற்று எவ்விதம் வீசி ஓயப்போகிறது என்று குழப்பம் கொண்டிருக்கிறோம்.

ஜெர்மனியும் ரஷ்யாவும் போலந்தை மூன்று வாரங்களில் விழுங்கிவிட்டன. எதிர்பாராத சீக்கிரத்தில் ஜெர்மனி வெற்றியடைந்துவிட்டது. பங்கிடும் சமயத்தில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிக்கும் முறையில், ருஷிய கரடியும் (ஓநாயும்) ஜெர்மன் புலியோடு விருந்துண்ண இலையைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விட்டது; சாப்பிட்டுவிட்டு ஏப்பம் விட்டபடியே, "அண்ணே, இன்றைக்கு எனக்குப் பசி தீர்ந்துவிட்டது. நான் உங்களை அடித்துத் தின்றுவிடமாட்டேன். கையிலெடுத்த கத்தியைக் கீழே போட்டுவிடுங்கள். வீண் சண்டை வேண்டாம். எதற்காகதுஷ்டத்தனம்?" என்று குள்ளநரி முஸ்ஸோலினி மூலம் ரஷ்யா தூது அனுப்பியிருக்கிறது. ஸ்டாலின் ஸர்வாதிகாரி முகத்தில் இப்பொழுதுதான் புன்சிரிப்பைப் பார்க்கிறோம்.

இந்த நெருக்கடியில், நமது கடமையென்ன? கொள்கையென்ன? வெற்றியடைந்தால் வெற்றியின் பயனை யார் எப்படி யடைகிறது? இவைகள் முக்கியக் கேள்விகள். இந்தத் தீர்மானத்தை ஒட்டியே மேல்நாட்டு நாகரீகத்தின் எதிர்கால வாழ்வு நிற்கிறது. சென்ற 200 வருஷகாலமாய் நெபோலியன் காலம் முதல், நடந்து வரும் ஐரோப்பிய யுத்தங்களின் கருத்து, அந்தரங்க லட்சியம் என்னவென்றால், ஐரோப்பாவில் ஒரு சமஷ்டி ஏற்படுத்த வேண்டுமென்பது தான்; அரசியல் வேற்றுமை யழிந்து ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்பது தான் அதன் கருத்து. பல வழியிலும் மேன்மை யடைந்த மேல்நாட்டு நாகரிகம், யுத்தப் புயற்காற்றில் வேரோடு அழியாமல் காப்பாற்றப்பட வேண்டுமென்பதும் அதன் கருத்தாகும். அது ஏன் நடைபெறவில்லை? கத்தியால் ஆளுபவன், கத்தியாலேயே அழிந்து போவான். இந்த சமஷ்டியை அமைக்க வழியென்ன? ஒரே ஒரு வழிதான்.

எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து "நாங்கள் எங்கள் நாட்டில் தனித்தனியாக யுத்ததளவாடங்களையும் சைன்யங்களையும் வளர்த்து வைத்துக்கொள்வதில்லை. ராணுவத்தைக் கலைத்துவிடுகிறோம். போலீஸ்படையே போதும்" என்று தீர்மானித்து அமுலுக்குக் கொண்டுவர வேண்டியதுதான் ஒரே வழி. இது இயற்கையில் தானே நடக்குமா? மயிலே, மயிலே இறகு போடு என்றால் போடுமா? போடாது, மற்றொருவர்

தடியை எடுத்து அடித்தால்தான் நடக்கும்.

இந்தியாவில் ஒருவித சமஷ்டி எப்படி ஏற்பட்டது? பிரிட்டிஷ் படைகள் உள்ளே புகுந்து வெற்றியடைந்து இந்தியாவின் மாகாணப் படைகளை யழித்துத் தானே ஒருவிதமாய் அசோகன், அக்பர் நாளைப்போல ஐக்கியம் ஏற்பட்டது.

அத்தகைய சம்பவம் ஐரோப்பாவிலும் நடக்க வேண்டுமென்றால், ஐரோப்பா சம்பந்தப்பட்ட தேசங்கள் மாத்திரம் ஒன்று கூடிப் போர் செய்து சமாதானத்திற்கு வர முடியாது. வர்சேல் ஒப்பந்தம்போல் மறுபடியும் ஆகும். யுத்தத்திலும், ஐரோப்பிய அரசியலிலும் கலக்காமல் நிற்கும் அமெரிக்கா, இந்தியாவைப்போன்ற தேசங்கள்தான் முன்னின்று ஐரோப்பிய ஒருவிதமான சமாதானத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதை இப்பொழுதே நடத்தமுடியுமா? யுத்தம் பெருகி இருவரும் களைத்த பிறகு தானுக முடியும். இருதரப்பிலும் இருக்கும் வீராவேசத்தைப் பார்த்தால் இப்பொழுது முடியுமென்று தோன்றவில்லை.

ஆனால் எல்லாரும் சரிவழியில் இப்போழுது சமாதானத்திற்கு முயலவேண்டியது அவசியம், இல்லாவிட்டால் நாகரீகம் அழியும். ஆயுத பரிஹரணத்திற்கு ஒப்புக்கொள்ளாமல் எல்லா சமாதானப் பேச்சும் மிகப் புரட்டுதான். ஸர்வாதிகாரி ஸ்டாலின் இருக்கும் நோக்கத்தைப் பார்த்தால் தான் இந்த யுத்தத்தில் கலந்துகொள்ளாமலே, யுத்தத்தைப் பெருகவிட்டு, இரண்டு படைகளும் அழிந்த பின்பு, தன் மீசையை முறுக்கி விட்டு (60 லட்சம் படையின் வீரம்) "நான் சொன்னதைக் கேட்கிறீர்களா இல்லையா? அல்லது நான் இருவர் கன்னங்களிலும் பளீர் என்று அறைவேன். என் சட்ட திட்டத்தை ஒப்புக்கொள், இல்லாவிட்டால் அறைவேன்." என்று இருவரும் களைத்த நேரத்தில் ஓங்கிச் சொல்வாரென்று தோன்றுகிறது.

காமக்ரோதத்தை விட்டுவிட்டு, சமாதானத்திற்கு ஒரு கை எல்லோரும் பார்க்கவேண்டும்—இது சமயம் தப்பினல் பின்னல் முடியாது. சமாதானத்தோடு ஆயுத பரிஹரணம் செய்யத் தயாராய் இருக்கிறோம். என்று ஒவ்வொரு நாடும் ஹிட்லர் முதல், ஸ்டாலின் வரையில் சேம்பர்லேன் முதல் டிலேடியர் வரையில் வாக்குத் தத்தம் கொடுத்தாலொழிய சமாதானம் நடைபெருது. முடியாது, தவிர, ஏகோபித்து ஒரே சமூகமாய்ச் சேர்ந்து நிற்கும் ஒரு ஜாதி ஜனங்களுக்கு, அவர்கள் இஷ்டப்படி அவர்களுக்கு ஸ்வயாட்சி உண்டென்றும், பகிரங்கமாய் எல்லா தேசங்களும் ஒப்புக்கொள்ளவேண்டும். இது இல்லாததுதான் புரட்சிக்கும், யுத்தத்திற்கும் முக்கிய காரணம். இதுவல்லாமல் ஆயுத பரிஹரணம் செய்தும் பயனில்லை. இதெல்லாம் இந்த நெருக்கடியில் நடக்கக்கூடிய விஷயமா என்று கேட்கலாம். இயற்கையில் நடக்காது. இடித்த இடி எங்கேயாவது விழுந்துதானே ஆகவேண்டும்? யுத்தம் மகா பாரத யுத்தமாகத்தான் போய்விடும், வெற்றியிலும் மேல்நாட்டு நாகரீகம் சீர்கெட்டுவிடும். உலகம் முழுவதும் குழப்பம்தான். இந்தப் பெரிய யுத்த நெருக்கடியில் நமது கடமை யென்னவென்று அடுத்த வாரம் பார்ப்போம்.

முதல் கடமை நமது அடிமைத்தனம் ஒழியவேண்டும். காலையும் கையையும் கட்டி, வாய்ப்பூட்டு போட்டுவிட்டால், நாம் எப்படி ஓடியாடி பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு உதவிசெய்ய முடியும்? இந்தியாவின் அடிமைத் தனம்தான் ஐரோப்பா மகாபாரத யுத்தத்துக்கு ஆணிவேர்.

கே. எஸ். வேங்கடரமணி.

குறிப்பு

மங்களகரமான வாரம் :—

இவ்வாரம் ஓர் மங்களகரமான வாரம். ஓர் தேசிய ஞானியும் கர்மயோகியுமான பெரியார் பிறந்த வாரம். புனிதமான வாரம். உலகம் போற்றும் அஹிம்சா மூர்த்தி தோன்றிய தினத்தைத் தன் னகத்தே கொண்ட வாரம். மனிதன் அடையமுடியாத ஓர் அதிர்ஷ்டத்தை இவ்வாரம் அடைந்திருக்கிறது.

இம்மாதம் இரண்டாந்தேதி உலகம் போற்றும் மஹான் மஹாத்மா காந்தி பிறந்த தினம். காந்தியைத் தெரியாத குழந்தைளே உலகில் இல்லை எனச் சொல்லலாம். தினசரியில் வரும் காந்தியின் படத்தை முன்பின் அறியாத ஓர் சிறு குழந்தையிடம் காண்பித்தால், அக் குழந்தை "காந்தித் தாத்தா" எனச் சொல்லிக்கொண்டே கூத்தாடும். அம் மஹானுடைய எழுபத்தோராவது பிறந்ததினம் இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. தாத்தாவுக்கு எழுபத்தோராவது வயது நிறைந்தாலும், அவர் வேலையில் சளைத்தவர் என்று நினைக்கிறீர்கள்? அதுவும் இந்தியாவின் விதியை நிர்ணயிக்கும் பொழுதா? இப்பொழுதும் அவருடைய மாயச்சிரிப்பினுல் உலகத்தையே மயக்கிவிடுவார். அவனி ஆளும் அரசனைக் காணும்பொழுதும் அதே சிரிப்புத்தான், கழனி வேலைசெய்யும் குடியானவனைக்கண்டாலும் அதே சிரிப்புத்தான். அதே பொக்கைவாய்ச் சிரிப்புடனும், முழங்கால்வரைத் துண்டுடனும், சாண் அகலம் மேல் துணியுடனும், உலக நாகரீகம் உதித்தெழுந்து கூத்தாடும் லண்டன் மாநகரில் தற்கால நாகரீகம் புரளும் வீதியில் சென்றாரென்றால் அவருடைய மனோ வலிமையை யாரால் நிர்ணயிக்கமுடியும். சிலர் உஷ்ணப் பிரதேசமாகிய இந்தியாவிலேயே பனியனைக் கழற்றுவதற்கு பயப்படுகிறார்களே! (இல்லாவிட்டால் அவர்களைப் பிறர் மனிதனென்று மதியார்களாம்.) இவரைக் கண்ட சபையிலிருந்த எல்லாப் பிரபுக்களும் ஆவென்று திறந்த வாயை வீட்டிற்கு வந்துதான் மூடினார்களாம்! இம்மனிதனைக் கண்டு அவ்வளவு பயப்பட்டார்களாம் அப் பிரகிருதிகள்! பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் தன் சுண்டுவிரலில் ஆட்டிய வீரர் அல்லவா.

காந்தி ஓர் கர்மயோகி. பலரைப்போல அவரிடம் வெறுஞ் சொற்கள் வெளிவரா. அவர் கூறுவதைச் செய்கையில் காட்டியே விடுவார். மேடையில் சண்டமாருதமாகப் பேசிவிட்டு வீட்டிற்குப் போய்க் கட்டிலில் அப்பாடா'வென்று படுத்துக்கொண்டு உறங்குகிற பேர்வழியில்லையவர்.

கண்ணனைப் போன்று இந்தியாவின் சுதந்திரத்திற்கு வழிகாட்டியவர். "இது நம் நாடு, நம் தாய் நாடு, இந்நாட்டின் சுதந்திரம் நம்முடைய பிறப்புரிமை, அந்நியனுக்கு ஏன் பயப்படவேண்டும், நாம் இனிமேல் நிமிர்ந்து செல்வோம்" என்ற உணர்ச்சியைத் தட்டி யெழுப்பியவர் அவரே. இந்திய நாடு சுயராஜ்யம் அடைய உழைத்த உழைப்பில் நரைத்தவர், தேசிய ஞானத்தில் சாணக்கியனை நிகர்த்தவர். வேதாந்தத்தில் புத்தரை ஒத்தவர், சமூகச் சீர்திருத்தத்தில் ராமானுஜரைத் தோற்கடித்தவர். இப்பெருமை வாய்ந்த காந்திஜீ என்றும் பதினாறுகச் சிரஞ்சீவியாக வாழவேண்டும். நம் நாடு சுதந்திர நாடாவதைக் கண்குளிரப் பார்க்கவேண்டியது. பெண் குடித்தனம் பண்ணுவதைப் பெற்றவன் பார்த்து மகிழ்வதேபோல, நாம் நம் நாட்டை ஆளும்பொழுது அவர் பார்த்து அக மகிழ்ந்து ஆசீர்வதிக்கவேண்டியது. அவர் புன்முறுவல் விளையாடும் இன்முகங் கண்டு நாம் மகிழவேண்டும்.

"சாந்த நிலை நின்று சான்றோர் நெறி காட்டும்
காந்தியடிகள் கலங்கா நிலை வாழ்க."

அன்னை பெஸன்ட் :—

ஞானத்திலே பழுத்த கனி. பிரம்ம ஞானத்திலே கரைகண்ட யோகினி, அமைதியுற்ற முகம், ஒளிவீசும் கண்கள், அன்பு கனியும் சொற்கள். வீரத்தில் திறம்பட்ட அம்மை. இந்திய வாஞ்சையுடைய ஐரோப்பிய ஸ்திரீ, வார்த்தையினால் சொல்வதற்கியலாத வாஞ்சை படைத்த அன்னைதான் அனிபெஸன்ட். மேல்நாட்டு உடல் ஆனால்கீழ்நாட்டுஉயிர், இங்கிலாந்தின் சதை ஆனால் இந்தியாவின் ரத்தம், இந்திய நாட்டு மேன்மைகளையும், புகழையும் மேல்நாட்டில் பறைசாற்றிய தாய், ஹிந்துமதத்தின் கோட்பாடுகளைத் திறமெனப் புகழ்ந்த தேவி, யார்? அன்னை அனிபெஸன்ட்தான்.

அன்னை அனிபெஸன்டின் ஞாபகார்த்த நாளை இவ்வாரத்தில் இந்தியாவெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வம்மை பிரம்ம ஞானத்திற்குச் செய்த தொண்டு அளவிடற்கரிது. அடையாரிலிருக்கும் பிரம்ம ஞானசபைக்குத் தலைவராகப் பல வருஷங்கள் இருந்தவர். இந்திய தேசிய சபையான காங்கிரஸின் மாஜித்தலைவர். தேசவிடுதலைப் போரில் உழைத்தவர். மகாத்மாகாந்திக்குத் தேசிய விஷயத்தில் தைரியங் கூறியவர். இந்தியாவின் சுதந்திர தாகத்தை உலகிற் கெடுத்தோதிய அம்மையை நாம் மறக்க முடியாது.

சமாதானம் !

சமாதானம், சமாதானமென்ற காலத்திலெல்லாம் மும்முரமாகப் பூமியை பிடித்துக்கொண்டிருந்த ஹிட்லர், தன் வேலையெல்லாம் ஆனபிறகு "வந்துவிட்டேன் சமாதானத்திற்கென்று" அறை கூவுகின்றார். ஆனால் ஹிட்லருக்கும் சமாதானத்திற்கும் வெகுதூரமென்று உலகம் அறியாமலில்லை. இச் சமாதானத்தைப் பற்றி யெழுதும்போதுதான் இங்கிலாந்துப்பத்திரிகைகள், 'ஹிட்லருடைய சமாதான அழைப்பு பீதியினால் ஏற்பட்டிருக்கிறது, உலக சமாதானம் ஹிட்லரிஸம் ஒழிந்தால்தான் ஏற்படுமென" எழுதுகின்றனர்.

ஹிட்லர், ஸ்டாலினுடன் ஓர் ராணுவ ஒப்பந்தம்செய்து கொண்டு விட்டார். இவ்வொப்பந்தத்தினால் ஸ்டாலின் ஹிட்லருக்கு யுத்தத்தில் உதவிசெய்ய வேண்டுமென்று எவ்வித கட்டாயமுமில்லை. இவ்வொப்பந்தத்தினால் ரஷ்யாதான் லாபமடைந்திருக்கிறது. இது போதாதென்று ஜெர்மனி, ரஷ்யாக் கரடியைத் திருப்தி செய்வதற்காகவே பல கம்யூனிஸ்டுக் கைதிகளை விடுதலை செய்திருக்கிறது. இது தவிர ஆங்காங்கு சுவரில், ரஷ்யாவை எதிர்த்துப் பிரசாரம் பண்ணியிருக்கும் விஷயங்களை ஈரத்துணியினால் அழிக்க ஆரம்பித்துவிட்டார் ஹிட்லர். கம்யூனிஸ்டு தேவதைக்கு கொயபெல்ஸை நரபலியாகவுங் கொடுத்துத் திருப்தி செய்துவிட்டார்.

ஹிட்லருடைய சமாதானக் கோரிக்கைகளுக்குப் பதிலாக "டெய்லி மெயில்" என்ற ஆங்கிலப் பத்திரிகை "ஹிட்லருடைய சமாதான எதிர்ப்பினால் பிரிட்டன் பயப்படப் போவதில்லை. ஹிட்லர் சமாதானம் வேண்டுமென்று மனப் பூர்வமாக எண்ணினால், முதலில் பலாத்காரத்தினால் பிடித்த போலந்து, ஜெக், ஸ்லோவேகியா, ஆஸ்டிரியா முதலிய நாடுகளை விட்டுவிடவேண்டும். இரண்டாவதாக ஹிட்லரிஸம் ஒழியவேண்டும்" எனக் கூறுகிறது. மேற்கூறிய நிபந்தனைகளை ஹிட்லரா ஒத்துக்கொள்ளப் போகிறார்? ஆனால் யுத்தமுடிவில் ஒன்று நிச்சயம். ஜனநாயகம் ஜயிக்குமா? அல்லது சர்வாதிகாரம் ஜயிக்குமா? ஜன நாயகம் ஜெயித்தால் சர்வாதிகாரத்திற்கு நாசம். சர்வாதிகாரம் ஜெயித்தால் ஜனநாயகத்திற்கு நாசம். இரண்டில் ஒன்று நிச்சயம்.

செய்தித் தொடர்

வைஸ்ராய் கூப்பிட்டதன் பேரில் காந்தி அவரைப் பேட்டிகாண சிம்லா சென்றிருக்கின்றார்.

லக்ஷ்மண புரியில் பேசும்பொழுது ஜவஹர்லால் நேரு, இந்தியாவின் பாதுகாப்பின் பொருட்டு ஒரு தேசியச் சேனையைச் சிருஷ்டி செய்யவேண்டுமென்று கூறியிருக்கின்றார். சிந்து மந்திரி சபையும் இதை ஆமோதிக்கின்றது.

வைஸ்ராய், தலைவர் ராஜேந்திரப் பிரஸாதையும் நேருவையும் பேட்டி காண அழைத்திருக்கின்றார்.

சிந்து மந்திரி சபை "தேசியக் கக்ஷி"யென்றோர் கக்ஷியை ஸ்தாபித்திருக்கிறது. அதற்குக் கனம் பிரதம மந்திரி அல்லா பக்ஸ்தான் தலைவர். தேச நன்மைக்காகப் பாடுபடுமாம் அக் கக்ஷி. கூடியவரையிலும் காங்கிரஸின் நிர்மாணத் திட்டங்களைக் கையாண்டு வருவார்களாம்.

லண்டனில் பிரபுக்கள் சபையில் பேசும்பொழுது, லார்டு ஜட்லண்டு "காங்கிரஸ் தலைவர்கள் இந்திய விடுதலையைக் கேட்பதற்கு இது தகுந்த காலமல்ல" வெனக் கூறியிருக்கின்றார்.

இதற்குப் பதில் கொடுக்கையில் காந்திஜீ "இந்தியா ஓர் சுதந்திர நாடாக இருந்தால் தான், பிரிட்டனுக்கு உதவிசெய்ய முடியும்" எனக் கூறியிருக்கிறார்.

காந்தி ஜயந்தியையும் அனிபெஸண்டு நாளையும் இந்தியா முழுவதும் எல்லோரும் கொண்டாடுகிறார்கள். இவ்வாரம் முழுவதும் காந்தி வாரமாக இருக்கும்.

இம்மாதம் 1-ந்தேதி வட ஆற்காடு ஜில்லாவில் மதுவிலக்கு ஆரம்பித்தாய்விட்டது. காங்கிரஸ் மந்திரிகள் அங்கு விஜயஞ்செய்தார்கள்.

சுபாஷ் பாபு வங்காளஞ் சென்றால் கைது செய்யப்படுவாரெனத் தெரிகிறது.

சென்னையில் முன்பிருந்த வெளிச்சத்தில் பாதிதான் இருக்கிறது. பாதி இருள்திட்டம் ஆரம்பித்தாய்விட்டது.

இம்மாதம் எழாந்தேதியிலிருந்து முழு இருள் திட்டமும் ஆரம்பிக்கப் போவதாகத் தெரிகிறது.

நேச நாடுகள் ஜெர்மன் ஆகாய விமானத் தொழிற்சாலையில் குண்டுபோட்டு நாசஞ்செய்தன.

போலந்தின் தலைவர் மொஸிகியும் சேனைத் தலைவர் ஸ்மிக்லிரிட்ஸூம் ருமேனியாவில் காவலில் இருக்கின்றனர்.

ஜெர்மனி ஆக்ரமித்த போலந்துப் பிரதேசத்தில் யூத எதிர்ப்பு ஆரம்பித்தாய்விட்டது. திருப்புகள் ராஜ்யமும் ஆரம்பித்தாய் விட்டது.

பிரான்ஸிலுள்ள கம்யூனிஸ்டு கக்ஷி கலைக்கப்பட்டது.

லக்ஸம்பர்க் கருகிலுள்ள ஒரு ரயில்வே பாலம் தகர்க்கப்பட்டது.

போலந்தைப்பற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வருவதற்கு ரிப்பன்ட்ராப் மாஸ்கோவுக்குச் சென்றிருந்தார். ஸ்டாலின் அவரைக் கௌரவிக்க ஓர் விருந்து வைத்தார். அவ்விருந்தில் ரிப்பன்ட்ராப்பினுடன் அநேக யூதர்கள் உட்கார்ந்துகொண்டு விருந்து சாப்பிட்டார்களாம்.

வார்ஸாவிலுள்ள குடிமக்களின் பரிதாபகரமான நிலையை உத்தேசித்து வார்சா பகைவனிடம் சரணமடைந்து விட்டது.

போலந்திலிருந்து தஞ்சம் புகுந்த போலிஷ்காரர்களைக் காப்பாற்ற, போலந்துத் தங்கத்தையே ருமேனியா செலவழிக்கிறது.

யுத்தத்தை நிறுத்துவதற்கான முயற்சிகளை ரஷ்யாவும் ஜெர்மனியும் சேர்ந்து செய்யுமாம். யுத்தம் நிற்காவிட்டால் இரண்டு நாடுகளும் சேர்ந்து நேசநாடுகளுடன் சண்டை செய்யுமெனத் தோன்றுகிறது.

மறுபடியும் கிழக்கே ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் யுத்தந் தொடங்கிவிட்டது.

டாக்டர் கொயபெல்ஸ் மறுபடியும் கடுங்காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

இரண்டு நார்வேக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

பிரிட்டிஷ் ஆகாயக் கப்பல் சேனை, ஜெர்மன் ஆகாயக் க்கப்பல்களை ஹெலிகோலாண்டு என்னுமிடத்தில் தாக்கிற்று.

போலந்தில் ஓர் பொம்மை நாட்டை ஸ்தாபிப்பதற்கு ஹிட்லர்ஒத்துக்கொண்டிருக்கிறார்.

சமாதானத்தை நிலவச்செய்ய இதாலியிலிருந்து சியோனேப் பிரபு ஹிட்லரைச் சந்தித்தார்.

ஆசிரியரின் கடிதம்

"என்ன ஓய், 'ஆசிரியருக்குக் கடிதம்' என்று எழுதச் சொன்னால் 'ஆசிரியரின் கடிதம்' என்று யாரய்யா உம்மை எழுதச் சொல்லியது?" என்று ஸ்ரீமான். டி. பாலசுப்பிரமணியம் தலைமையில் மற்றெல்லா நண்பர்களும் கேட்கலாம். "ஆசிரியருக்குக் கடிதம் என்று போடாமல் ஆசிரியரின் கடிதம்" என்று போட்டதற்கு மன்னிப்பீர்களென்று நம்புகிறேன். "ஆசிரியருக்குக் கடிதம்" என்ற தலைப்பில் ஒன்றோ அல்லது இரண்டு பக்கமோ வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் ஒழித்துவிடத் தயார். இவ்வாரத்திலேயே பக்கங்களை ஒழித்து விடுவதாக எண்ணியதுண்டு. ஆனால் மறுகணமே, அப்படி ஒழித்து விட்டால் பக்கம் பிளாங்கியாகப்போகும். வாசகர்கள் இதைக்கண்டு திடுக்கிட்டுப் போய், மாஜிக் மசியினால் "ஆசிரியருக்குக் கடிதம்" எழுதி யிருக்கின்றார் போலிருக்கிறது என்று நினைத்து விஷயத்தை அறிய ஆவல்கொண்டு மறுபக்கத்திலிருந்து அப்பக்கத்தைக் கிழித்தெடுத்து விளக்கில் காட்டிக் கஷ்டப் படுவார்களே யென்றெண்ணி "ஆசிரியரின் கடிதம்" எழுதலானேன்.

விஷபத்திற்கு வராமல் என்னென்னமோ எழுதி யிருக்கிறதே எனப் பலர் எண்ணலாம். விஷயத்திற்கு வருமுன்னமே பலமாகப் பீடிகை போட்டாய் விட்டது. விஷயம், என்னமோ விஷயந் தான்! டிராமில் மிஸ்டர் ராமமூர்த்தியய்யர் தொங்கிக்கொண்டே பிரிட்டனை எதிர்த்துப் பலமாக வாதஞ்செய்யத் தொடங்கினர். இதைக் கேட்ட தொங்கும் வளையங்கூடக் கோபங்கொண்டது. முடிவு என்னடான்னா, வளையத்தை நம்பியிருந்த மிஸ்டர் ராமமூர்த்தியய்யர் தடாலென்று கீழே விழுந்து கட்டையைக் கௌவினர். இதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் சிரிக்காமல் இருக்க முடியுமா? எல்லோருந்தான் சிரித்தார்கள். அவருக்குக் கோபம் கோபமாக வந்து விட்டது. "டாம் இடியட், டிராம்வே கம்பெனிக்கு மூளை கிடையாது! பணத்தை மட்டும் பறிக்கிறார்களே தவிர பிரயாணிகளுக்கு என்னென்ன சௌகர்யங்கள் செய்யலாமென்று நினைக்கக்கூட மாட்டார்கள் போலிருக்கிறது. இதோ வீட்டிற்குச்சென்று கனம் பிரதம மந்திரிக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன்," என்று முணுமுணுத்துக்கொண்டே சென்றார். இம்மாதிரி அசம்பாவிதங்கள் நகரங்களில் நடப்பது சகஜம். ஆகையால் அவைகளெல்லாவற்றையும் நீக்கவும், மற்றும் சௌகர்யத்திற்கு வேண்டிய பல வசதிகளைப் பெறும்பொருட்டும் பல நிர்மாணத் திட்டங்களைக் கடித ரூபமாகப் பாரத மணியின் மூலம் வெளிப்படுத்தலாம்.

திடுதிப்பென்று ஏழு கிராமம் உலகப்ப கௌண்டர் காரியாலயத்தில் பிரவேசித்தார். அவர் கண்கள் கொவ்வைக் கனி போலச் சிவந்து ஜ்வலித்தன. "என்னய்யா" என்று கேட்பதற்கு முன்பே அவர் ஓர் நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு "இந்த ரயில்வேக்காரன் செய்யற அட்டூழியம் கணக்கு வழக்கில்லே சார். மாயவரத்திலிருந்து வருகிற ரெயிலில் இன்னும் இரண்டு மூன்று வண்டிகள் மாட்டினால் என்னய்யா குறைந்து விடுகிறது? உண்மையைச் சொல்கிறேன்சார், நேற்று குற்றாலத்தில் ஏறியவன் இன்று காலை ஆறரை மணி வரையிலும் நின்றுகொண்டே வந்திருக்கிறேன். ஓர் மூலையில் சிறிதுநேரம் குந்திக் கொண்டு தூங்கலாம் என்று பார்த்தாலோ அங்கே எறும்புகள் டிக்கட்டில்லாமல் பிரயாணஞ் செய்ய ஆரம்பித்தன (கௌண்டர் ஓர் ஹாஸ்ய சிகாமணி). மற்றொரு மூலையில் மழைத்தண்ணி சொட்டிக் குளமாய் இருந்தது. காசையுங் கொடுத்துத் தேளையும் கொட்டிக் கொண்டேன். இன்று ரெயில்வே கம்

பெனிக்கு ஓர் கடிதம் எழுதிவிடுவ தெனத் தீர்மானித்து விட்டேன்," என்று சொல்லிக்கொண்டே பேனவை யெடுத்து மசியில் தோய்த்தார். எப்படி இருக்கிறதுகாரியம்.கோபந்தணிந்தவுடன் எழுதிய கடிதத்தைக் கிழித்தெறிந்து விட்டு "உங்க பத்திரிகையில் இதெல்லா வற்றையும் பற்றி எழுதுவது கிடை யாதோ?" எனக் கேட்டார். உங்களைப் போலொத்த பெரிய மனுஷியர்களுக் குன்னு விஷயங்கள் தெரியும், எழுதவுந் தெரியும்" என்றேன். கௌவுண்டருக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. "சரி, ஊருக் குப் போய் ஓர் கடிதம் எழுதுகிறேன் என்று சொல்லிவிட்டு ஹோட்டலுக்குக் கிளம்பினர். ஆகையால் ரயிலோ அல்லது அதைச் சம்பந்தப்பட்ட ஸ்தலங்களைப் பற்றியோ ஊழல்களையும், அவைகளை எவ் விதம் நிவர்த்திசெய்யலாம் என்பதைப் பற்றியும் கடித மூலமாக எழுதி அனுப்ப லாம்.

சம்பாதித்த பணத்தை நிலத்தில் போட்ட ரிடையர்டு இன்ஜினியர் ராவ் பகதூர் லம்போதர அய்யர், பென்ஷ னுடனும், சகதர்மிணியுடனும், பேபி கமலாவுடனும் (பதினறு வயது நங்கை!) பிடாரைக் கிராமத்திற்குக் குடியேறினர். "கிராமத்திற்குச் செல்"என்று தலைவர் கள் சொல்லிக்கொள்வதைக் காரியாம்சத் தில் கொண்டுவந்தேன்" என்று வாக்கிங் ஸ்டிக்குடன் ஏரி குளம் களத்திற்குச் செல்லும்பொழுது கோடிவீட்டுக் குப் பண்ணுவிடம் சொன்னதாகக் கேள்வி. "வெளிக்கு மட்டும் சொல்கிறரே யொழிய உள்ளுக்குள் கிராமவாசம் அவ ருக்குப் பிடிக்கவில்லை" என்று பேபி, ஆடிக்கு வந்த தன் கணவரிடம் கூறின ளாம். இதுவும் உண்மையாக இருக்க லாம். இப்பேர்ப்பட்ட மனுஷியர்கள் கிராமங்களைத் தங்கள் வாசத்திற்கேற் றற்போலச் சீர்திருத்திக்கொள்ளவேண்டி யதுதான். அவ்விதம் சீர்திருத்திக் கொண்டால் நகரமென்ற நரகத்தை எட் டிக்கூடப் பார்க்கமாட்டார்கள். "அவருக் குக் கால்வாயிலும் நதிகளிலும் மதகு கட்ட பிளான் போடத் தெரியுமே தவிர கிராமத்தைச் சீர்திருத்தப் பிளான் போடத் தெரியாது," என அவருடைய காரியதரிசி எழுதியிருக்கிருர். ஆகையால் கிராமத்தை எவ்விதம் சீர்திருத்தலாம் என்பதைப் பற்றியும், ரயில் வசதி, பஸ் வசதி, ரஸ்தா, சுகாதார முறையையும், பஞ்சாயத்து, பட்டாமணியம், கணக்குப் பிள்ளை, தலையாரி முதலிய வேலைகளில் ஏதாவது சீர்திருத்தம் செய்யவேண்டு மென்றாலும் கிராம அபிவிருத்திக்கு வேண்டிய திட்டங்களைக் கடிதமூலமாக எழுதி அனுப்பினல் லம்போதர அய் யருக்குக் கொஞ்சம் உதவியாக இருக்கும்.

ஆகையால் நகரங்களாகட்டும், கிராமங் களாகட்டும்; ரஸ்தாவாகட்டும், பஸ்ஸா கட்டும், வயற்பாதையாகட்டும்; கட்டை வண்டியாகட்டும் இத்யாதி விஷயங்களைப் பற்றியும் அவைகளுக்கு வேண்டிய சீர் திருத்தங்களையும் கடிதம் மூலம் எழுதி ஞல் குடக்கூலியில்லாமல் இடம் விடத் தயார். பேனவில் மசியாய்விட்டது. ஸ்டீல் பேனவைக் காணவில்லை. பென்சில் சீவவில்லை. ஆபீஸ் பையன் கத்தியைப் பைக்குள் போட்டுக்கொண்டு இல்லாத இடங்களெல்லாந் தேடுகிருன். மணி மூன்றடிக்கிறது. வயிறே பசி பசி யென்று அழுகிறது. விடைபெற்றுக் கொள்ள வேண்டியதுதான். ஆகையால் அடுத்த ரயிலில் உங்கள் கடிதங்களை எதிர்பார்க்கிறேன்.

நமஸ்காரம்,

பாரதமணி.

ஸுபாஷிதம்

(ரா. ரா)

ரே ரே கோகில மா பஜ மௌனம்,
கிஞ்சிதுதஞ்சய பஞ்சம ராகம்,
நோசேத் த்வாமிஹ கோ ஜானீதே
காக கதம்பக பிஹிதே சூதே. ஓர் கவி.

"ஏ கோகிலமே நீ மௌனமாக இருக்காதே. சிறிது பஞ்சம ராகத்தில் கானம் செய். இல்லாவிட்டால் காகங்களின் கூட்டம் நிறைந்த மாமரத்தில் உன்னை எவன் அறியப்போகிறான்?"

இவ்வகைச் சுலோகத்திற்கு "அன்யாபதேசம்" என்று பெயர். ஒருவரைக் குறித்து நேராக ஒரு விஷயத்தைச் சொல்லாமல், மரங்கள், பறவைகள், மிருகங்கள், மேகம் முதலியவற்றில் ஏதாவதொன்றைப் பார்த்து அர்த்தம் ஊகிக்கப்படுமாறு கூறுவது அன்யாபதேசம் எனப்படும்.

மேற்கூறிய சுலோகம் கோகில பக்ஷியைப் பார்த்துக் கூறப்பட்டது. "ஏ கோகிலமே! நீ வசிக்கும் மாமரத்தில் உன்னுடன்கூடவே பல காக்கைகளும் இருக்கின்றன. உயர்ந்த பறவையான நீ மிகவும் அல்பமான காக்கைகளின் மத்தியில் இருந்து வருகிறாய். இனிமையான குரலில் நீ கானஞ் செய்யாமல் மௌனமாக இருந்தால் உன்னையும் காக்கையென்றே எல்லோரும் எண்ணிவிடுவார்கள். ஆகையால் உன் பெருமையைக் காண்பிப்பதற்கு நீ கானம் செய்தே ஆகவேண்டும்".

உண்மையில் இவ்வார்த்தைகள் ஓர் வித்வானைப் பார்த்துக் கூறப்பட்டன. "ஏ வித்வானே! நீ அறிவிலிகளின் நடுவில் இருந்துகொண்டு வருகிறாய். ஆகையால் எக்காலமும் நீ உன் ஞானத்தையும், அரிய விஷயங்களையும், நன்மொழிகளையும் பிறர் அறியும் வண்ணம் வெளியிட்டுக்கொண்டேயிருக்கவேண்டும். மற்றவர்கள் உன் வார்த்தைகளைக் கேட்டால் கேட்கட்டும், கேட்காவிட்டால் போகட்டும். ஞான சூன்யர்களிடம் நாம் ஏன் பேசவேண்டுமென் றிருந்துவிடாதே. நீ சொல்லவேண்டியதைச் சொல்லிக் கொண்டேயிரு. இல்லாவிடில் நீயும் ஒரு பாமரனென்று கருதப்படுவாய்".

வித்வான்களின் வகை

வித்வான்கள் இருவகைப் பட்டவர்கள். ஒரு பகுதியார், பாமரர்களிடம் நாம் ஏன் பழகவேண்டுமென்று மமதை பிடித்து மௌனஞ் சாதிப்பார்கள், இல்லாவிடில் சபையில் பேசுவதற்கு லஜ்ஜைப் படுவார்கள். மற்றொரு பகுதியார், தங்களிடத்திலுள்ள சிறந்த விஷயங்களை உலகிற் பரப்பி எல்லோரும் நன்மையடையவேண்டுமென்று எண்ணுவார்கள். ஆகையால் ஏதாவது கூறிக் கொண்டேயிருப்பார்கள். ஆனால் இப்படிப்பட்ட வித்வானை உலகம் பாராட்டுவது கிடையாது. அவர் சொல்வதையும் கேட்பது கிடையாது. "ஒரு வித்வான் உலகத்தில் மூவரிடம் தன் ஞானத்தை வெளியிடலாம். அவர்கள் முறையே வித்வான்கள், பிரபுக்கள், ஞான சூன்யர்கள்" என பர்த்ருஹரி ஓரிடத்தில் கூறியிருக்கின்றார்.

ஆனால் வித்வான்கள் மற்றொரு வித்வான் கூறுவதைக் கேட்க மாட்டார்கள். அசூயை நிறைந்தவர்கள். மற்றவர்களின் மேன்மையைக் கண்டு பொறாமைப் படுபவர்கள். வித்வான்களே இவ்விதமென்றால், பிரபுக்களைப்பற்றிக் கேட்கவேண்டியதில்லை. கர்வம், அலக்ஷியம் முதலிய கீழ்க் குணங்கள் நிறைந்தவர்கள்; வித்வான்களை ஆதரிக்க மாட்டார்கள். ஞானமற்றவர்களோ, இன்னும் மோச

மானவர்கள். வித்வான்கள் கூறும் நல் விஷயங்களை அனுபவிக்கச் சக்தியற்றவர்கள். ஆகவே ஒரு வித்வானின் ஸுபாஷிதமானது அவனது உடலிலேயே ஜீர்ணமாய் விடுகிறது. உலகத்தின் போக்கு இவ்வாறிருப்பினும், அறிவாளிகள் தைர்யத்துடன் தங்கள் சாமர்த்தியத்தை வெளிப்படுத்த வேண்டும்.



''மாத்ரு பூமி''யில் குமுதினி



வேல்''முருகன்'' பாண்டுரங்கனில், காளி. என். ரத்தினமும், டி. ஏ. மதுரமும்.

மரியாதை செய்தல்

(ஏ. என். கல்யாணசுந்திரம் எம். ஏ.)

தேசத்தில் ப்ரஸித்தி பெற்றவர்களை மரியாதை செய்வது ஒவ்வொரு தேசத்தாரின் முக்கிய கடமை. ப்ரஸித்தி பெற்ற மதாசாரியார்கள், பண்டிதர்கள், கவிகள், நடிகர்கள், ஸங்கீத வித்வான்கள், மற்றுமுள்ள சாஸ்திர நிபுணர்கள் இவர்களை நாம் மரியாதை செய்து கௌரவிக்க வேண்டும். தெரு, குளம், கட்டடங்கள், நந்தவனங்கள் முதலியவற்றிற்கு ப்ரஸித்தி பெற்றவர்களின் பெயர்களை வைத்து நம் நாட்டில் மரியாதை செய்கிறோம். மேல்நாட்டில் இன்னும் கொஞ்சம் அதிகமாய்ச் சென்று, 'ப்ரூஹாம் விக்டோரியா' என்று வண்டிகளுக்கும், 'செஸ்டர் பீல்ட்' என்று அலமாரிக்கும், 'கிளாட்ஸ்டோன்' என்று தோற்பைக்கும், பெயரிட்டு மரியாதை செய்திருக்கிறார்கள். ஆனால் இவை அவ்வளவு த்ருப்திகரமாய் இல்லை. காலஞ்சென்றவர்களில் சிலரே மரியாதை செய்யப்பட்டு இருக்கின்றனர். இக்காலத்திலிருப்பவர்களைக் கௌரவிக்கவில்லை. தவிர எல்லா ப்ரஸித்தி பெற்றவர்களும் கௌரவிக்கப் படவில்லை.

இந்தக் குறையை நீக்க வழி ஒன்று இருக்கிறது. அதை அனுஸரித்தால் இந்தக் குறையை ஸுலபமாக நம் தேசத்திலிருந்து நீக்கிவிடலாம். சாதாரணமாக நாம் பேசும்போது உபயோகிக்கும் பதங்களுக்குப் பதிலாக, ப்ரஸித்தி பெற்ற 'பெயர்கள்', 'ஸம்பவங்கள்', இம்மாதிரி ஸம்பவங்கள் நடந்த 'இடங்கள்' இவைகளை உபயோகிக்கவேண்டும். இவைகளின் அங்க அடையாளங்கள், பழக்க வழக்கங்கள், வாழ்க்கையில் நடந்த பெரிய ஸம்பவங்கள், இயற்கைக் குணங்கள் முக்ய விசேஷங்கள் முதலியவைகளின் சேர்க்கையால் மேற்கூறிய ப்ரஸித்தமானவைகளின் பெயர்களைக் கூறிய மாத்திரத்தில் அவைகளின் அர்த்தம் நமக்கு உடனே விளங்கிவிடும். இத்துடன் அப்பெயர்களை அடிக்கடி கூறி மரியாதை செய்ததாகவும் ஆகும். உதாரணமாகக் கீழே ஒரு ஸம்பாஷணை எழுதியிருக்கிறேன். அதேமாதிரி நீங்கள் அனைவரும் பேசி நம் தேசத்தில் ப்ரஸித்திபெற்றவர்களைக் கௌரவித்து உங்கள் தேசபக்தியைக் காட்டுங்கள்.

ஹரிசங்கர் ஓர் பெரிய 'பால்கே' முதலாளி. அநேக படங்கள் 'கௌஸல்யாவாக' ஆனதால் கவலைகொண்டு இராத் தூக்கமின்றி காலையில் எழுந்தார். சமையல்காரன் கொடுத்த 'கணேஷ்' மிகவும் ஆறிப்போயிருந்ததால், அதைச் சாப்பிடாமல் கொட்டிவிட்டுக் கோபத்துடன் ஸ்நானம் செய்யச் சென்றார். தோட்டத்திலிருந்த ஒரு 'லின்லித்கோ' ஓடிவந்து அவரை முட்டி காயப்படுத்திவிட்டது. இந்த வலியைப் பொறுத்துக்கொண்டு ஸ்நானம் செய்து உடையணிந்து 'ஜவஹர்லாலை' மாட்டிக்கொண்டு ஹாலுக்குச் சென்றார். அங்கே அவர் மனைவி உமாலக்ஷ்மி, ஆபீஸ் மேஜையின் மேல் 'சிதம்பரத்தையும்', 'காஞ்சீவரத்தையும்' வைத்துக்கொண்டு 'ஜாலியன் வாலா' செய்து கொண்டபடியே ஹரி சங்கரை லக்ஷ்யம் செய்யாமல் 'அரியக்குடி' செய்து கொண்டிருந்தாள். இதைக் கண்ட ஹரிசங்கருக்கு ஒன்றும் புரியவில்லை. கனவோ என்ற ஸந்தேஹமும் உண்டாயிற்று. 'ராஜாஜியை' சுழற்றித் துடைத்து மாட்டிக்கொண்டு மறுமுறை பார்த்தார். கோபம் பொங்கியது. அடியே என்று ஒரு 'இராமசாமிப் பெரியார்' போட்டார். உமாலக்ஷ்மி அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

ஹரி:—அடியே உனக்கென்ன, 'கே. ஸீ. டே' வந்துவிட்டதா என்ன? நான் வந்திருப்பதைக்கூடக் கவனிக்காமல் அலக்ஷ்யம் செய்ய உனக்கு அவ்வளவு தைர்

யம் வந்துவிட்டதா? கணவன் என்ற மதிப்பு....

உமா:—ஷ்-போதும் இந்த 'சத்ய மூர்த்தி.'

ஹரி:—காலையிலிருந்து இதுவரை 'மஹாத்மா காந்தி' ஆகிவிட்டது. நீ என்னமோ.....

உமா:—உஸ். அது என் குற்றமா? வேண்டுமானல் வேலைக்காரனை 'ஸர்தார் படேல்' செய்கிறதுதானே.

ஹரி:—எனக்கு 'பூரி சங்கராச்சாரி யாரா' செய்கிருர்?

உமா:—உங்களுக்கு 'ஸி. வி. ராமன்' தான் இல்லையே. நான் என்ன செய்வது?

ஹரி:—ஏன்டீ 'அமர்நாத்தா' செய் கிருய். உன்னை 'நாரிமன்' செய்து விடு வேன் ஜாக்ரதை!

உமா:—அதற்கு முன்னுடியே நான் குடும்பத்திலிருந்து 'ஸ்ரீனிவாஸய்யங் கார்' செய்துவிட மாட்டேனு. என்று ஒரு 'ஸி. கே. நாயுடு' அடித்தாள்.

ஹரி:—ஓஹோ அப்படியா சமாசாரம், உன்னை உடனே 'தேஷ்முக்' செய்து விடுகிறேன் பார்.

உமா:—நான் மட்டும் சும்மா விடு வேனு? ஜீவனும்சத்திற்கு உடனே 'ஸுபாஷ் போஸ்' போட்டுவிடுவேன். ஞாபகமிருக்கட்டும்.

ஹரி:—போட்டால் என்ன. 'ஒ. கந்த சாமி' கூட கிடைக்காது.

இந்த சமயத்தில் அவர்கள் பெண் வந்து தனக்கு 'ஸரோஜனிதேவி' அர்த்த மாகவில்லை, சொல்லிக்கொடு என்று ஹரி சங்கரரைத் தொந்திரவு செய்தாள். கோபத்துடன் திரும்பிய ஹரிசங்கரரின் 'டாகூர்' அவள் வளையில் மாட்டியிழுக்க, வலி தாங்கமுடியாமல் 'டாகூரை' வளை யலிலிருந்து விடுவித்துக்கொண்டு, பெண் முதுகில் ஆத்திரத்துடன் நாலைந்து 'சாந்தா ஆப்டே' கொடுத்துவிட்டு, அவளை 'காரே' பண்ணினுர். இதனுல் கோபமும் ஆத்திரமும் தணிந்து, மனைவி யுடன் 'காந்தி இர்வின்' செய்யத் தொடங்கினுர். ஆனுல் மனைவியோ 'ஹரிபுராவை' விட்டு நகராமல், ஹரிசங் கரின் 'பூனுவையும்' அங்கீகரிக்காமல், 'பாய் பரமானந்த' செய்தாள். கடைசி யில் ஹரிசங்கர் வருத்தத்துடன் 'வரத ராஜுலு நாயுடு' செய்து ஆபீஸுக்குச் சென்றுர்.

அங்காகிலும் அவர் கவலை ஒழிந்ததா. இல்லை. டைரக்டர் அவரிடம் வந்து கதாநாயகனின் 'செம்மங்குடியில்' கொஞ் சங்கூட 'தக்ஷிணுமூர்த்தி பிள்ளை' இல்லை யென்று குறை கூறினுர்; கதாநாயகனே டைரக்டரிடம் 'சாந்தாராம்' இல்லை யென்று புகார் செய்தார். இதை அவர் 'ஸாப்ரூ' செய்வதற்குள், மானேஜர் வந்து, வேலைக்காரர்கள் 'டாண்டி மார்ச்' செய்துவிட்டதாகக் கூறினுர். இவை போதாதென்பதுபோல்,ஹரிசங்கர் மகன் 'அப்துல்லா காந்தி' செய்துவிட்டதாக டெலிபோனில் செய்தியும் வந்தது, ஹரிசங்கர் ஒன்றும் புரியாது திகைத்து. இடிவிழுந்தவர்போல் ஆசனத்தில் அமர் தார். 'மஹாத்மா காந்தி'யைக் கைக் கொண்டு இம்மாதிரி கஷ்டங்கள் வரக் காரணம் என்னவென்று யோசிக்க ஆரம் பித்தார். எதிரில் உள்ள சுவரில் ப்ரஸித்தி பெற்றவர்களின் படங்கள் சில மாட்டப்பட்டிருந்தன. அதைப் பார்த்த தும், அவருக்கு அவருடைய குற்றம் தெரிந்தது. அவர் குற்றம் என்ன? ப்ரஸித்தி பெற்றவர்களை 'வீரவல்லா' செய்து, 'மீராபென்' செய்யாததே.

குறிப்பு.—1. இது சிலருக்குப் புரியா மல் இருக்கலாம். அவர்களை உத்தே சித்து இந்த ஹரிசங்கர் உபாக்யானம் ஸாதாரணத் தமிழில் எழுதப்பட்டிருப் பதை 57வது பக்கத்தில் காண்க.

ஸ்டாலின் கொள்கை

(த. கிருஷ்ணமூர்த்தி)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஸ்டாலின் ஒருவரே லெனினுக்குப் பிறகு ஜெர்மனியுடன் நேசமாக வாழ வேண்டுமென விரும்பியவர். 1934-ம் ஆண்டு ஜூன் இறுதியில் ஹிட்லர் அதிர்ச்சிப் படை தலைவர் ரோகமயும் தளபதி ஷிலீசரையும் பிரிடோவையும் பிறரையும் சுட்டு வீழ்த்திய காலை பிறர் ஹிட்லர் ஆட்சி அழிவுக்கு அது அடையாளமெனக் கூறினும் ஸ்டாலின் ஒருவரே ஹிட்லர் பலத்தை அது பலப்படுத்துமெனக் கருதினார். சர்வ தேசசங்கத்தில் உறுப்பினரான போதும், கூட்டுப்பாதுகாப்பைக் குறித்து பேசிய காலையும், பிரான்சுடன் ஒப்பந்தம் செய்துகொண்டபோதும், போலந்துடன் நட்புக்கொண்டபோதும், ஸ்பெயினில் தலையிட்டபோதும், பிரிட்டனுடன் உறவாட முயன்றபோதும் ஸ்டாலின் தமது செய்கையைக் குறித்து ஹிட்லர் எவ்வாறு நடந்துகொள்ளுகிறார், தம்முடன் சேர முற்படுவாரா வென்பதையும் முக்கியமாகக் கவனித்து வந்தார். ஜனநாயக வல்லரசுகளுக்கு மன்பதையில் வேண்டிய அளவிற்குக் காலனிகளிருப்பதால் அவைகளுக்குக் குறைகளில்லை. ஆனால் தனியாட்சி நாடுகளோ மூலப்பொருட்களுக்கும், வர்த்தகத்திற்கும், காலனிகளில்லாமல் தவிக்கின்றன. எனவே அவை தமது பலத்தைப் பெருக்கிக்கொண்டு வருகின்றன. ஜனநாயக நாடுகளைவிட அவை பலமுடையதாகக் காணப்படுகிறது. எனவே அவைகளுடன் சமாதானம் செய்துகொள்ளத் தீர்மானித்தார். ஹிட்லர் பலம் பெருகப்பெருக அவருடன் சமரசம் செய்துகொள்ள மேலும் முயன்றார். அவருக்கு ஜனநாயக நாடுகளின் வீரத்திலும், பலத்திலும் உறுதியிலும் நம்பிக்கையற்றுவிட்டது. தவிர முடிவில் நாடாசை பிடித்த ஹிட்லருக்கும், காலனிகளைப் பெருமிதமாகக் கொண்ட ஜனநாயக நாடுகளுக்கும் தகராறு ஏற்படலாமென்றும் அதற்காக அதுமுதலே ஹிட்லரைத் தம் பக்கமிருக்க வழிபார்த்தார்.

முசோலினி பதவிக்கு வந்த நாள் தொட்டு ரஷ்யாவுடன் நெருங்கிய உறவைக் கொள்ள முயன்றதை அந்நாடே புறக்கணித்து வந்தது. ஆனால் ஹிட்லர் ஆட்சியின்போது அவ்விரு நாடுகளும் அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்துகொண்டன. ஜெர்மனி, இதாலி, ரஷ்யா மூன்றும் ஆயுதபரிகரண மகாநாட்டில் ஒத்துழைத்தன. ஹிட்லர் எழுச்சியினாலேயே ஜெர்மனிக்கும் ரஷ்யாவிற்கு மிருந்த தொடர்பு தற்காலமாக ஒழிந்தது! என்றாலும் இரு நாடுகளிடையிருந்த வர்த்தகத்தை ஹிட்லர் தடுக்கவில்லை. பொது உடமை பூச்சாண்டி காட்டி ஜனநாயக வல்லரசுகளையும் பிறரையும் ஏமாற்றக் கருதினர் அது முழுதும் பலித்ததால் உக்ரைன் அடையவேண்டுமென்பது அவர் கருத்து. அதற்காக அதற்கிடையிலுள்ள நாடுகளைப் படிக்கவேண்டியது அவருக்கு அவசியமாயிற்று. ஆனால் அவ்வாறு ஜெர்மனி பெரும் பிரதேசத்தை பெற்றால் உடனே தங்களைத் தாக்க ஹிட்லர் எண்ணாவிடினும் அவர் பலம் தங்களைவிட ஓங்கியிருக்குமாதலால் தங்களை எப்போதும் தாக்க அவருக்குச் சௌகரியமாயிருக்குமென்பதை மேற்கு வல்லரசுகள் அறிந்தன.

ஹிட்லர் பதவிக்கு வந்த பிறகும் சோவியத் அதிகாரிகள் ஹிட்லருடன் ஒரு முடிவுக்கு வரவேண்டுமெனக் கருதினார்கள். கைத்தொழில் ஜெர்மனியும், விளைபொருள் ரஷ்யாவும் ஒன்று சேர்ந்தால் மன்பதையை ஆட்டுவிக்கலாமெனக் கருதினார்கள். அக்கருத்தை மோலடோவ்,

லிட்வினுப், காலினின் முதலியோர் முதலில் ஆதரித்தார்கள். வெர்சேல்ஸ் உடன்படிக்கையை ஒழிக்க ரஷ்யாவும் (பிற நாடுகளால் அரசியல் வட்டாரங்களினின்றும் ஒதுக்கப்பட்டதால்) தயாராக விருப்பதாகக் கூறியது. 1934 ஜனவரி இறுதியில் ஸ்டாலின் "எமக்கும் தனியாட்சிக்கும் விரோதமில்லை. நாங்கள் பாஸிஸ இதாலியுடன் உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே தனியாட்சி முறையினுல் ஜெர்மன் உறவு கெடக்கூடா"தென்றூர். தவிரவும் தனியாட்சி முறையே வெர்சேல்ஸ் தீர்ப்புக்குப் பழிவாங்கத் துவக்கப்பட்டதாகையால், அதற்குப் புறக்கணிக்கப்பட்ட சோவியத்தும் உதவுமெனக் கூறினர். ஹிட்லர் செவிசாய்க்கவில்லை. ஆகவே ஹிட்லரைப் பயமுறுத்த சர்வதேச சங்கத்தில் ரஷ்யா உறுப்பினரானது பால்டிக் நாடுகளின் சுதந்திரத்திற்கு உறுதி கொடுக்கும்படி லிட்வினுப் 1934-ம் ஆண்டு ஏப்ரலில் ஹிட்லரைக் கேட்க அவர் மறுத்து விட்டார். லிட்வினுப் ஜூன் மாதத்தில் பர்லின் சென்றும் பயனில்லை. போலந்துடன் நெருங்க அது ஜெர்மன் நட்பையே விரும்பியது.

1934-ம் ஆண்டு இறுதியில் பிரான்சுடன் ஒப்பந்தம் செய்துகொண்டபோதும் சோவியத் ரஷ்யா ஹிட்லரை மறக்கவில்லை. ரஷ்யா-இதாலி உறவு மாதிரி ஜெர்மன்-ரஷ்யா உறவிற்குத் தடங்கலிருப்பதற்கு இடமில்லை" என லிட்வினுப் அதுகாலை கூறினர். அதனைக்கண்டு ஹிட்லர் ஜெர்மனி ரஷ்யாவிற்குச் சில வர்த்தக சலுகைகளை அளித்தது.

1935-ல் ஈடன், லவால், பெனஷ் மூவரும் மாஸ்கோ சென்றகாலை ஹிட்லர் ஜெர்மனி இருபதுகோடி தங்கமார்க்குகளுக்கு ரஷ்யாவிற்குக் கடன் வசதியளித்தது. சமயத்திலே பர்லின் ஜப்பானிய ஸ்தானீகரின் ராணுவ ஆலோசனையாளரான தளபதி ஒஷிமாவும் வான் ரிப்பன் டிராப்பும் ஒடியாவையும், சைனுவையும் குறித்து ஒரு ரகசிய உடன்படிக்கை செய்துகொண்டார்கள். இவ்வுடன்படிக்கை முற்றும் முடிந்த பிறகே அந்தந்த அரசாங்க அதிகாரிகளுக்கே தெரியும். ஆனுல் உலகமக்களை ஏமாற்ற 1936-நவம்பரில் பொது உடமை எதிர்ப்பு ஒப்பந்தமென்று ஒரு (போலி) உடன்படிகையைச் செய்துகொண்டதாகப் பறைசாற்றினர்கள்.

ரஷியாவிற்கு விரோதமாகச் செய்துகொண்ட உடன்படிக்கைக்குப் பதிலாக ஸ்டாலின் ஜெக்நாட்டுடன் ஒப்பந்தம் செய்துகொண்டனர். லிட்வினுப்பைக் கூட்டு பாதுகாப்பு முறையை ஆதரிக்கும்படி அதிகாரமளித்தார்.

1937-ம் ஆண்டு இறுதியில் ஸ்பெயினில் ஸடாலின் தலையிட்டதும் பயனற்றது. எனவே ரஷ்யா தனித்து விலகுவதைத் தவிர வேறு வழியைக் காணும். லிட்வினுப் ஜனநாயக வல்லரசுகள் தனியாட்சிகளுக்கு இடங்கொடுப்பதைப் பரிகசித்தார். 1938-ம் ஆண்டு மார்ச்சு 3-ம் தேதி லெனின் தோழர்களான ரைகோவ் புகாரின் கிரெஸ்டின்ஸ்கி முதலியோரை ஹிட்லர் கூலிகளெனத் தூக்கிலிடப்பட்டார்கள். 12-ம் தேதி ஹிட்லர் ஆஸ்திரியாவை ஆக்கிரமித்ததும் சமாதான நாடுகளின் மகாநாட்டைக் கூட்டும்படி ரஷ்யா கூறியதாவது. (ஆனுல்தான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.) சர்வதேச சங்க ஆதரவில் உதவவேண்டுமென சென்ற ஆண்டு செப்டம்பர் நெருக்கடியின்போது லிட்வினுப் கூறினர். (ஜெக்நாட்டுடன் உதவி ஒப்பந்தமிருக்கும்போது சர்வதேச சங்கத்தைக் குறிப்பிடுவானேன்?) மியூனிச்சிற்குப் பிறகு ரஷ்யா திரும்பவும் ஜெர்மனியின் நட்பைப்பெற முயன்றது ஜனநாயக வல்லரசுகள் தங்கள் பலத்தைப் பெருக்கி வருவதைக் கண்டு ஹிட்லர் மேலும் அவை தமக்கு இடங்கொடாதோ வெனப் பயப்பட்டார்.

இவ்வாண்டு ஜனவரியில் புத்தாண்டு விழாவின்போது ஹிட்லர் மற்ற ஸ்தானிகருடன் நெருங்கிப் பழகியதைக்கண்டு பிறநாடுகள் அஞ்சின. லண்டன் "நியூஸ் கிரானிகள்" மங்கோவும் பர்லினும் ஒருப்

படப்போவதாகக் கூறியது. அதனை மாங்கோ "பிராவ்டா" பெரிதாகப் பிரசுரித்தது ஜனவரி 25-ம் தேதி "டெயிலி ஹெரால்டு" போர் நிகழுமானல் ரஷ்யா நடுநிலைமை வகிக்குமென்றும் ஆனல் அதன் உறவைப்பெற ஜெர்மனி ஒருவர்த்தகக் குழுவை அனுப்புவதாகவும் கூறியது. பிப்ரவரியில் ரஷ்யா தன்னிடமுள்ள பெட்ரோலை ரோம்-பர்லின் அச்சுநாடுகளுக்கு மாத்திரமே விற்பதென உறுதி கூறியிருப்பது தெரிந்தது. ஆஸ்திரியா ஐக்கியத்திற்குப் பிறகு 1939-ம் ஆண்டு மார்ச்சு 10-ம் தேதியே ஸ்டாலின் திருவாய்மலர்ந்தார். அன்றைய பேச்சில் ஹிட்லரின் ஆஸ்திரிய ஆக்கிரமிப்பைக் குறித்தோ, மியூனிச் மோசடியைக் குறித்தோ எதுவுமில்லை. பின் ஜனநாயக நாடுகள் ஜெர்மனிக்கும் ரஷ்யாவிற்கும் தகராறு எதுவுமில்லாதிருக்கையில் அவைகளுள் வேற்றுமையைக் கிளப்பிப் போர்செய்துகொள்ள முயல்வதாகக் கூறினர். அதற்கு ஐந்து நாட்கள் கழித்து ஹிட்லர் ஜெக்நாட்டை ஏப்பமிட்டார். ஸ்டாலின் படை திரட்டவில்லை. ஜெர்மனியைத் திட்டவில்லை.

ஸ்டாலின் ஹிட்லரின் பலத்தை அறிந்துள்ளதாலேயே அவரிடம் சமரசமாகப் போக விரும்புகிருர் அதற்காகப் பொருளாதாரத் துறையில் எல்லா சலுகைகளும் தரத்தயாராக விருக்கிருர். ஹிட்லர் ஜெர்மனியினின்றும் யூதர்களை வெருட்டி அடித்தும், பொது உடைமை கொள்கைக்குத் தந்தை கார்ல்மார்க்ஸ் யூதராயினும், தமது நாட்டில் அவர்களுக்கு அபயமளிக்கவில்லை. உலகத்திலேயே ரஷ்யநாடே பெரிது ஜனநெருக்கம் மிகவும் குறைவு. ரஷ்ய திட்டங்களை நிறைவேற்ற ஜெர்மானிய அமெரிக்க நிபுணர்கள் வேண்டியிருக்கிறது. ஆகவே அவர் உண்மையில் ஹிட்லரை அடக்க எண்ணங்கொண்டவராயின் யூதர்களுக்கு அபயமளித்திருக்கலாம். அவர்களின் அறிவாற்றலைத் தம் நாட்டிற்கு உபயோகித்திருக்கலாம். அவர்களின் மூலமாக ஜெர்மனியின் பலத்தையும் அறியலாம். எனினும் நாடின்றித்தவிக்கும் யூதர்களுக்குச் சமதர்ம நாடெனக் கூறிக்கொள்ளும் ரஷ்யா சிறிது மிடங்கொடுக்கவில்லை. முதலாளி நாடுகளே இடங்கொடுத்து வருகிறது. யூதர்களுக்கு இடங்கொடுத்து ஹிட்லரின் விரோதத்தைச் சம்பாதித்துக்கொள்ள ஸ்டாலின் விரும்பவில்லை. தவிரவும் பொதுஉடமைத் தத்துவம் யூதர் கொள்கை யென்றும் அன்னர் கூறி வருகிறபடியால் அதற்கு இடங்கொடுக்க விரும்பவில்லை.



BOOKS

By

K. S. VENKATARAMANI

JUST PUBLISHED

		Rs.	As.
1. **A Day with Sambhu** (In Hindi)	...	0	3

	Rs.	A.
2. **Jatadharan & other Stories** (A collection of Short stories) ...	1	8
3. **Kandan, The Patriot** (A Novel of New India in the making) Second Edition (Revised and Enlarged)	2	0
4. **Renascent India** (A Study of Indian Problem) Third Edition	1	0
5. **A Day with Sambhu** (Talks to a Boy) (In English. Second Edition)	0	8
6. **The Next Rung** (A Constructive Study of Modern civilisation) Second Edition ...	1	0
7. **Murugan, the Tiller** (A Novel of Indian Rural Life) Third Edition	2	0
8. **On the Sand-Dunes** (Musings of Life in Free Verse) Second Edition	1	0
9. **Paper Boats** (Sketches of Indian Village life) Fourth Edition ...	1	0
Booklets :		
1. **The Indian Village** (A Ten-Year Plan) ...	0	8
2. **Dr. Annie Beasant** A Tribute ...	0	4
3. **High Ways of Astrology** By Kumbha. Second Edition ...	1	
4. **Venkatramani: Writer and Thinker** By Manjeri S. Isvaran ...	0	8
In Tamil :		
1. **Kandan, The Patriot** (By the Author himself) ...	1	
2. **Murugan The Tiller** By Krishna Kumari (M. L. J. Office, Mylapore)	1	8
3. **The Indian Village** (By the Author himself) ...	0	
In Telugu :		
1. **Murugan, The Tiller** By P. Ramabrahmam (Andhra Patrika Office, Madras) ...	1	8
2. **Kandan, The Patriot** (Ramaswami Sastrulu & Sons, Madras) ...	1	4
3. **A Day with Sambhu** (Ramaswami Sastrulu & Sons, Madras) ...	1	4
In Sanskrit :		
1. **A Day with Sambhu** By Y. Mahalinga Sastri ...	0	4

SOME OPINIONS

1. Mr. Venkataramani writes beautifully about Indian village life. I have read books of his for some years and now "Paper Boats" is in its third edition. Charming and accurate descriptions: attractive essays.—HAMILTON FYFE in *The Daily Chronicle.*

2. Mr. Venkataramani is a Village prose-poet. He frames a political programme while he plays the lyre.—*The Literary Guide.*

3. An Indian who writes with rare charm and sympathy about his own people.—J. A. SPENDER in *The Changing East.*

4. One of the foremost writers of India; an Indian Thinker.—*Public Opinion.*

The following books have been approved for Library use by the Madras Text-Book Committee: Vide Fort St. George Gazette (Part IB) Supplement dated 2nd June 1936. (Consolidated list of approved books).

Approved for Library use :—

English :	Vide page of the Ft. St. George Gazette		Rs.	A.
Paper Boats	57	...	1	0
A Day with Sambhu	57	...	0	8
The Indian Village	53	...	0	4
Tamil :				
Our Village Life	155	...	0	2
Sanskrit :				
Approved for Class use :—				
Sambhu-Caryopadesa By Y. Mahalinga Sastri	215	...	0	4

SVETARANYA ASHRAMA, 7, North Mada Street, Mylapore.

எங்களூர் கிருஷ்ணய்யர்

(மௌனி)

எங்களூர் கிருஷ்ணய்யர் ஒரு வைதிக குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆனால் சில வைதிகர்களைப்போல் ஆசார அனுஷ்டானங்களைச் சௌகரியத்திற்குத் தகுந்தாற் போல் மாற்றிக்கொள்ள மாட்டார். வேத வாக்கிய பரிபாலனம் செய்கிறவர். தனக்கு அசட்டுப் பட்டம் வந்தாலும் சரி, தன் மனச்சாக்ஷிக்கு விரோதமாக ஒருநாளும் நடக்கமாட்டார். இதனால் அவர் வாழ்க்கையில் பல விசித்திரமான சம்பவங்கள் நடந்ததுண்டு. அவற்றில் ஒன்றை இங்குக் குறிப்பிடுகிறேன்—

"எங்கள் கிராமத்திலிருந்து ரயில்வே ஸ்டேஷன் கிட்டத்தட்ட நாலைந்து மைலாவது இருக்கும். தன் ஆயுட்காலத்தில் ஒரு தரமாவது குடும்ப ஸஹிதமாய்க் கும்பகோணத்திலுள்ள மஹாமகத்திற்குப் போகவேண்டும் என்று நிச்சயம் செய்திருந்தார். அதே மாதிரி மஹாமகம் வந்ததும் குறிப்பிட்ட ஒரு நாள் காலை எட்டுமணி வண்டிக்குப் போவதற்கு ஏற்பாடு செய்து விட்டார்.

குறிப்பிட்ட நாளும் வந்தது. ஒரு மாட்டு வண்டியை வாடகைக்குப் பேசி அதில் தன் மனைவியை ஏற்றி ரயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டுத் தான் பின்னால் நடக்கலானார். சிவா! சிவா! அவரா மாட்டு வண்டியில் ஏறுவார்? ஒரு பிராணியைத் துன்புறுத்தலாமா! அஹிம்ஸை பரமோ தர்மமல்லவா! கிருஷ்ணய்யர் வேகமாக ரயிலடிக்கு நடந்து போகும் போது எதிரே வந்த ஓர் ஆசாமி கிருஷ்ணய்யரைப் பார்த்து, "சாமி! கள்ளுக் கடைக்கு வழி தெரியுமா" என்றான். ராம! ராம! கள் குடிப்பது ஒரு பாபமான காரியமல்லவா! அதற்காகவா இவர் உதவுவது! 'எனக்குத் தெரியாதப்பா' என்று சொல்லிவிட்டுக் கிருஷ்ணய்யர் மேலே நடக்கலானார். கொஞ்சதூரம் சென்றவுடன்தான் கிருஷ்ணய்யருக்குத் தான் ஒரு தப்பான காரியம் செய்துவிட்டதாகத் தோன்றிற்று. "பொய் சொல்லி விட்டோமே! உயிர் போனாலும் பொய் சொல்லலாமோ! இதற்கு என்ன பிராயச்சித்தம் செய்வது என்று யோசித்தார். திரும்பி ஓடி அந்த ஆசாமியிடம் உண்மையைத் தெரிவிப்பது என்று தீர்மானம் செய்து வந்த வழியே திரும்பி ஓடலானார். மலைபோல் இவர் ஓடி வருவதைப் பார்த்த அந்த ஆசாமிக்கு உள்ளூர பயம் தட்டிற்று! இவர் அவனைப் பார்த்துக்கைகாட்டினவுடன் அவனுக்குச் சந்தேகம் நீங்கிற்று. தான் அவரிடம் கேட்ட கேள்விக்காகத் தனக்கு உதை கொடுக்கத்தான் வருகிறார் என்று நிச்சயம் செய்து, திகிலால் ஓட்டம் பிடிக்கலானான். இவர் ஓட அவன் ஓட அந்தக் காட்சி ரசமாய்த்தானிருந்திருக்க வேண்டும்! கடைசியில் அந்த ஆசாமி தானாகவே நின்று விட்டான், இவரிடம் மன்னிப்புக் கேட்கலாமென்று. இதற்குள் கிருஷ்ணய்யர் அவனிடம் நெருங்கி, 'நான் உன் கிட்டே பொய் சொன்னதற்காக மன்னிச்சுக்கோ. இப்படி இடது பக்கம் போனால் கள்ளுக்கடைக்குப் போகலாம்' என்றார். அந்த ஆசாமிக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லை. இப்படியும் ஒரு பிரகிருதி உண்டா என்று நினைத்துக் கொண்டான்.

கிருஷ்ணய்யர் ஸ்டேஷனுக்குப் போவதற்குள் எட்டுமணி வண்டி தவறிவிட்டது. அங்கே இவருக்காகக் காத்திருந்த இவருடைய மனைவி இவர்மேல் ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்ய ஆரம்பித்து விட்டாள். "எனக்குத் தெரியுமே! நீங்க வழியிலே ஏதாவது அசட்டுக் காரியம் செய்வேள் என்று! இப்போ நம்ப ரயில் தப்பிப் போச்சே, நம்ப சாயங்காலம் வரை காக்கணுமே" என்றாள். கிருஷ்ணய்யருக்கு அவளைத் தேற்றுவதற்குள் மலையைப் புரட்டி விடலாம் போலத் தோன்றிவிட்டது.

ராத்திரிவேளை. ரயிலும் போய்க்கொண்டிருந்தது. கிருஷ்ணய்யர் தூங்கவில்லை. அவர் மனச்சாட்சி அவரை உறுத்திக் கொண்டிருந்தது. தன் மனைவி, பிள்ளை, தனக்கும் சேர்த்து இரண்டரை டிக்கட் வாங்கியிருந்தார். ஆனால் அவர் கணக்கின்படி தன் பிள்ளையின் பன்னிரண்டாவது வயது அன்று ராத்திரி ஒரு மணியுடன் பூர்த்தி அடைகிறது. ஆனால் அப்பொழுதோ மணி ஒன்றுக்கு மேல் ஆய்விட்டது. "அய்யோ! பன்னிரண்டு வயதிற்கு மேல் இருக்கும் பிள்ளைக்கு அரை டிக்கட்டை வைத்துகொண்டு ரயில்வேக்காரனை ஏமாற்றுகிறோமே! என்று கிருஷ்ணய்யர் புலம்ப ஆரம்பித்தார். திடீரென்று அவருக்கு ஒரு யோசனை தோன்ற அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுத்தார். வண்டி நின்றது. கார்டினிடம் சென்று சமாசாரத்தைத் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். கார்டுக்கு ஒன்றுமே புரியவில்லை, அழுவதா சிரிப்பதா என்று.

உங்களுக்கோர் முத்து மாலை!

பாரத மணியின் இரண்டாவது 26 முத்துக்கள் கோர்க்கப்பட்டு பைண்ட் வால்யூமாகத் தயாராகி விட்டன.

இரண்டே ரூபாய்தான்

உங்கள் பிரதிக்கு உடனே எழுதுங்கள் ;—

பாரத மணி கார்யாலயம்
312, தம்புசெட்டி தெரு, ஜி.டி. சென்னை.

லைப் அஷ்யூரன்ஸுக்கு :

நியூ கார்டியன் ஆப் இந்தியா லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

மதராஸ்.

இக்கம்பெனி புதிய இன்ஷ்யூரன்ஸ் சட்டத்தின் விதிப்படி எல்லாக் கம்பெனிகளுக்கும் விதித்துள்ள தொகையான 2-லக்ஷம் ரூபாய்த் தொகையை முன்பே அடைந்திருக்கிறது.

இக்கம்பெனி எல்லோருடைய விருப்பங்களையும் பூர்த்திசெய்யும் திட்டங்களுடன் கூடியது. இதன் பாலிஸி நிபந்தனைகள் எல்லோருக்கும் உகந்தது.

அஷ்யூரன்ஸைப் பற்றியாவது, ஏஜென்ஸி நிபந்தனைகளையாவது தெரிந்துகொள்ள வேண்டுமானால் தலைமை ஆபீஸுக்காவது, ஜில்லா அல்லது இன்ஸ்பெக்டர் ஆபீஸ்களுக்காவது எழுதிக் கேட்டுக் கொள்ளலாம்.

தலைமை ஆபீஸ் — **என். நாராயணன்**
மவுண்ட்ரோடு, மதருஸ். — மானேஜர்.

சுத்த எருமை மாட்டுப் பயல்

(கே. வி. வி.)

நாணச்சேரி கோபாலனைத் தெரியாமல் அநேகமாய் ஒருவரும் இருக்க முடியாது. அவன் புத்திக்கு உறைபோட ஒன்றுமே கிடையாது. அவனுக்குத் தனக்காகவும் தெரியாது, சொன்னாலும் கேட்கமாட்டான். அவன் பெயருக்குத் தகுந்தபடி மாடுகள் என்றால் அதிகப் பிரியம், அதிலும் மகிஷத்தைக் கண்டால் ஒரு தனி அபிமானம். தனக்குச் சொந்தமாய் இல்லாவிடினும், ஊரில் யார் எருமையாயிருந்தாலும் ஓட்டி மேய்த்துத் தேய்த்துக் குளிப்பாட்டிக் கட்டுவான். யாராவது சோபுவின் சிரமத்துக்காக ஏதாவது தின்பண்டங்கள் கொடுத்தாலும் ஒப்புக்கொள்ள மாட்டான். தன் தினசரி வேலையிலும் தவறமாட்டான். எப்படியாவது அவனுக்கு வீட்டில் இருக்கக்கூடாது. அவன் பெற்றோர்கள், ஒரு பாட்டியை அவனுக்கு ஆதாரமாக விட்டு, விண்ணுலகேகினர். பாட்டியோ சொல்ப மஞ்சக்காணி சொத்திலிருந்து கோபாலனைக் காப்பாற்றி வந்தாள். பாட்டிக்கு கோபு நாலு இங்கிலீஷ் படித்தால் எங்காவது உத்தியோகம் பண்ணலாமே என்று இருந்தது. பாட்டி ஏதாவது சொல்லுவாளோ என்னமோ என்று கோபுவும் சாப்பாட்டு வேளை தவிர உள்ளேயே வருவதில்லை. தெருவில் கோலியாடிக்கொண்டிருந்தாலும், ஒரு எருமையைக் கண்டால் அதன்மேல் ஏறிச் சவாரிசெய்ய ஆரம்பித்து விடுவான். கோபாலனுக்குப் பாட்டிதானே, தன் வீட்டில் ஒரு எருமையை வாங்கிக் கட்டினால், கோபு தினமும் அதைக் காப்பாற்றித் தன் வீட்டிலேயே நல்ல பால் விற்றுச் சம்பாதிக்க வழிசெய்வானே என்று அவளுக்குக் கிடையாது. யார் யாருக்கு எந்த வழியில் மனம் செல்லுமோ அந்த வழியிலேயே திருப்பி அவர்களுடைய சம்பாத்தியத்துக்கு வழிசெய்வோமென்றில்லாமல், ஒவ்வொருவரும் படிக்க வேண்டும், உத்தியோகம் செய்யவேண்டும் என்று அனேகருக்கு இருப்பதுபோல் பாட்டிக்கும் இருந்தது. அவள் எண்ணம் யாரிடத்தில் பலிக்கும். கோபண்ணுவுக்கும் வயது பதினேழடைய ஆரம்பித்து விட்டது. பாட்டி என்ன செய்வாள் பாவம்.

பாட்டியின் அடுத்த வீட்டு நாணுவய்யர் கல்கத்தாவிலிருந்து ஊருக்கு வந்தார். அவருக்கு அங்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் வரையில் சம்பளம் என்று கேள்வி. மிராசுதார்கள் தங்கள் நிலைமை தெரியாமல் செலவழித்தால் நாணுவய்யரைப் போன்றவருக்கு நிலம் வாங்குவது ஒரு சிரமமா? அவர் ஊரில் பாதி பங்கு அவருடையதுதான்.

நாணுவய்யரோ ஸாதாரணமாய் யாருக்கும் ஒத்தாசை செய்யமாட்டார். ஸ்வஜாதி என்றால் ஏதோ கொஞ்சம் பார்ப்போமென்பார். யாராவது ஸ்வஜாதிக்காரர், கல்கத்தாவுக்குப்போய் நாணுவய்யரைப் பார்த்தால், ஒருநாள் இரண்டுநாள் இரவு பத்துமணிவரைக்கும் நிற்கவைத்துவிட்டுப் பிறகு "ஏண்டா, இங்குநான் வேலை பண்ணிவைப்பேன் என்று யாருடா வரச்சொன்னது" என்று சொல்லாததெல்லாம் சொல்லிவிட்டு வேலையேதாவது பார்த்து வைப்பது வழக்கமாம்.

நாணுவய்யரும் பாட்டியும் ஒரே ஜாதிதான். நாணுவய்யர் ஊருக்கு வந்ததும், பாட்டி தினம், காலையிலும் மாலையிலும் அவர் வீட்டுக்கு நடந்து, நாணுவைக் குழந்தை கோபாலனை ஒரு வழிக்குக் கொண்டுவரும்படி வேண்டிக்கொண்டாள். ஏ என்று கூடத் தெரியாத நம் கோபண்ணுவைக் கட்டிக்கொண்டு நாணுவய்யர் என்ன பண்ணுவது? இருந்தாலும், பாட்டியின் உபத்திரவத்திற்காகவும், பையனும் ஸ்வஜாதியாய் இருப்பதாலும்

ஊருக்குக் கிளம்பும்பொழுது நாணுவய்யர் கோபுவையும் கூட்டிகொண்டு போனார். அங்கு அவனுக்கு வீட்டிலுள்ள குழந்தைகளைப் பார்த்துக்கொள்வதும், நன்றாகச் சாப்பிடவேண்டியதும் தான். ஆனால் நாணுவய்யர் மாதம் ஐந்து ரூபாய் வீதம் கோபாலன் பேரில் ஸேவிங்க்ஸ் பாங்கில் பணம் போட்டுவந்தார். ஒரே எருமைத் தியானத்தில் உள்ள கோபாலனுக்கும், தான் ஏறிச் சவாரிசெய்யமுடியாவிட்டாலும் கல்கத்தாவிலும் ஆயிரக்கணக்கான எருமை தரிசனம் கிடைத்தது.

இப்படியாக மூன்று வருஷத்தில் கோபாலன் வசம் ரூபாய் நூற்றெண்பது சேர்ந்தது. சாப்பாட்டுராமன் கையில் ரூபாய் சேர்ந்ததும் என்ன பண்ணுவதென்று தெரியாமல் கடைசியாக நூற்றைம்பது ரூபாய்க்கு, தான் உயிராகக் கருதும் ஒரு எருமைமாட்டை வாங்கி நாணுவய்யர் பங்களாத் தோட்டத்தில் ஒரு மூலையில் கட்டிவிட்டான். இனிக் கோபுவுக்கு அரைக்ஷணங்கூட ஒழியுமா? சதா எருமை சம்ரக்ஷணை தான். நாணுவய்யர் வீட்டில் நெய், பால் மோர், தயிர் இவைகளுக்குக் கவலைவிட்டது. ஜாஸ்தி பால் மீற ஆரம்பித்தது. நாணுவய்யர் தாயார் மிகுந்த பாலை வீண் செய்யாமல், தெரிந்த மதராஸி வீட்டில் விற்றுவரும்படி கோபாலனுக்கு, ஒரு யுக்தி சொல்லிக்கொடுத்தாள். இப்பொழுது கோபாலனுக்குக் கையில் கொஞ்சம் பைசா வரும்படி உண்டாயிற்று. இன்னும் ஒரு பசுவும் ஒரு எருமையும் வாங்கினான். இப்படியே ஒரு வருஷத்தில் கோபுவய்யருக்கு, கல்கத்தா பாலிகஞ்ச் மைதானத்தில் இருபது எருமையும் இருபது பசுக்களும் சொந்தமாகி விட்டன. அடுத்த இரண்டு வருஷத்தில் அதாவது இப்பொழுது நாலாயிரம்மாடுகள்வரைக்கும் இருக்கின்றன. வீ. கோபாலய்யரும், வீ. ஜீ. பாலாய் விட்டார். கல்கத்தாவில் கவண்டர் டயரிக்கு அடுத்தபடி நமது வீ. ஜி. பாலின் டயரிதான். அநேகமாய் நமது கோபுவின் கறந்த பால் சாப்பிடாதவர்கள் கல்கத்தாவில் இருக்கமாட்டார்கள். கோபுவுக்கு மாத்திரம் எவ்வளவு பணம் வந்தாலும், நாணச்சேரி ஞாபகம் விடவில்லை. நாணுவய்யர் வாங்காமல் விட்டிருந்த பாக்கி நிலங்களையும் அவனே வாங்கினான். யார் வேலையில்லை யென்று கோபுவிடம் போனாலும் அவருக்கு வேலை கிடைக்குமளவும் சாப்பாடும், தங்க இடமும் கிடைக்கும். இன்றைக்கும் இடது கைக்கட்டை விரலைக் கையெழுத்துக்காக, கைவைத்து அழுத்திக்கொண்டிருந்தாலும், மிகுந்த தாராள புத்தியுள்ளவன். பூர்வாச்சிரமத்தின் ஞாபகம் அவனுக்கு எப்பொழுதும் உண்டு. அன்றைக்கு எருமைமாட்டுப் பயல் என்று வைத்துகொண்டிருந்த கோபு இன்றைக்கு ராவ்பகதூர் வீ. ஜி. பாலாய்விட்டார்.

எங்கள் பக்கத்திலேயே கோபுவின் பேச்சுதான். எங்களூர் சுப்பராய கனபாடிகள் கூட "பாருடா என்னமோபோல இருக்கான் என்று எண்ண வேண்டாம், என்றைக்கும் ஒரு காரியத்தில் கருத்தாயிருப்பதினால் எப்படியும் முன்னுக்கு வந்துவிடுவான் என்று அப்பவே சொன்னேன்" என்று பல்லவி பாட ஆரம்பித்தார். கோபுவின் ஐசுவரியம் அல்லவா பேசச் சொல்லுகிறது! கோபுவின் பாட்டியும், போன அமாவாசையன்று பிரதக்ஷிணத்துக்கு நூற்றெட்டு பங்களூர் புடவை வாங்கிப் போட்டு ஸ்வஜாதி மனுஷ்யாளாகப் பார்த்து அதுவும், பணக்காரர்களாயும் பார்த்து தானம் செய்தாளாம். என்ன தாராள புத்தி! அடுத்தவாரம் கோபுவுடன் அவன் பாட்டியும் கல்கத்தாவுக்கு, ஏரோப்பிளேனில் போகப்போவதாக வதந்தி. விசாரித்ததில், நாளைக்கு கோபுவய்யருக்கும், நாணு மாமாவின் மூன்றாவது குமாரி அதிரூபசுந்தரிக்கும் சுபயோக, சுபகரண, சுப முகூர்த்தத்தில் பாணிக்கிரகணம் என்று கேள்வி! ஐந்து ரூபாய் நோட்டாகவே பூரியாம்! இப்படியாகக் கோபுவின் கதையே, நமக்கெல்லாம் நல்ல விருந்தளிக்கும் என்று நம்புகிறேன். நாழியாய்விட்டது. நாமும்கோபுவய்யரின் கலியாணத்துக்குக் கிளம்பவேண்டியதுதான்.

ரகு

(வி. ஸி. செல்லப்பா)

காவிரி நதி தீரத்தைச் சார்ந்த ஒரு குக்கிராமத்தில் ரகு என்பவன் வசித்து வந்தான். தாய்தந்தையர்கள் எளிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள். ரகுவுக்குச் சிறிது கல்வியறிவு முண்டு. உடற் பொலிவு வாய்ந்தவன். வயது இருபது. எப்பொழுதும் உண்மையே பேசுப்வன். எவரிடமும் மரியாதையுடன் நடப்பவன். விரோதியையும் அன்பாய் நேசிப்பவன்.

இவன் ஒருநாள் கோடைகாலத்தில், அருகாமையிலிருக்கிற கும்பகோணத்தில் வியாபாரியாயிருக்கும் தன் மாமன் வீட்டிற்கு நடந்து சென்றுகொண்டிருந்தான். வழியில் ஓர் மரஞ்சூழ்ந்த குளக்கரையை நெருங்கினான். வெயிற் கொடுமையாலும், வழி நடந்த களைப்பாலும், சோலையை யடைந்து அயர்ந்து நித்திரை போனான். அவ்வமயம் ஓர் உபாத்தியாயர் அவ்வழியே போனார். ரகுவைப் பார்த்து யாரோ குடிகாரப்பயல் குடிமயக்கத்தால் படுத்துக் கொண்டிருக்கிறானென்று அவன் முகத்தில் விழிக்கச் சற்றும் மனமில்லாது அங்கு விட்டகன்றனர்.

சிறிது நேரங் கழித்து, தக்க பருவமுள்ள நங்கை யொருத்தி நிழலின் அருமையை அனுபவிக்க ரகு தூங்கும் பொழிற்கு வந்து அடைந்தாள். சௌந்தர்யமுள்ள ஆடவன் படுத்திருப்பதைப் பார்த்துக் கழிபேருவகை பூத்தாள். சோர்ந்து நித்திரைபோகும் ரகுவின் கண்ணின்மேல் ஓர் வண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டு அருகில் நெருங்கி அதை விரட்டினாள். இவன் தனக்கு மணமகனாய் வாய்ப்பின் தனக்கு எவ்வளவு பாக்யமென்றும், வேறு புத்திரரில்லாத தன் பெற்றோர் இவனை நன்கு மதிப்பரென்றும் தனக்குத்தானே கூறிக்கொண்டாள். 'எவ்வண்ண மாகிலும் இவனை மணக்க வேண்டு'மென்று மனதில் திடஞ்செய்து கொண்டு, ரகுவை எழுப்பக் கிட்ட நெருங்குங்கால், வண்டியின் ஓசையைச் செவிமடுத்து வந்த வழியை மேற்கொண்டாள்.

அப்பெண் தன் மனமுடைந்து சிறிது தூரம் சென்ற பிறகு, ஒரு சீமானும் சீமாட்டியும் அவ்வண்டியில் வந்தனர். சோலையைப் பார்த்தவுடன் இளந்தென்றலின் இன்பம் துய்த்துப் பிறகு செல்லலாமென்று அங்கு இறங்கினர். அச் சீமாட்டி ரகு உறங்குவதைக் கண்ணுற்று, அவனைச் சூரியகிரணங்கள் தாக்குவதைநோக்கிச் சில தழைகளைத் தழைத்து, உஷ்ணத்தின் வெம்மையைப் போக்கினாள். உண்ணின்று யாதோ ஓர் உணர்ச்சி தோன்ற, நேரே தன் கணவனிடம் சென்று, "துயில்பவனைப் பார்த்தால் யோக்யமான சிறுவன்போல் தோற்றுகிறது. உம் தமையன் மகன் துஷ்டநடத்தை யுடையவனாதால் நாம் இவனை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளலாம்" என்றாள். அதற்கு அப்பிரபு, "இவன் பெற்றோர் யாரென்றும் எப்படிப்பட்டவரென்றும் நமக்குத் தெரியாது; ஆகையால் நாம் இச்சிறுவனைத் துன்புறுத்தாமல் செல்வோம் வா" என்றார். இவர்கள் இவ்வண்ணம் சம்பாஷணை புரியுங்கால், வண்டியோட்டுபவன் 'வண்டிசெல்வதற்குத்தயா'ரென்று கூறினான். உடனே சீமானும் அவன் மனைவியும் வண்டியில் சென்றனர். ரகு தூக்கத்தில் ஆழ்ந்திருத்தலால் நடந்த தொன்றும் அவனுக்குத் தெரியாது.

வண்டி கண்பார்வைக் கெட்டாத தூரத்தில் செல்வதற்கு முன்பே, இரண்டு கள்ளர்கள் அவ்வழியே போக லுற்றார்கள். மரமடர்ந்த இடத்தில் ரகு தலையணியாய் வைத்திருக்கும் மூட்டையைப் பார்த்து எல்லையிலா மகிழ்ச்சி அடைந்தனர். மூட்டையில் பணம் இருக்

குமென்றும், அதை அபகரிக்க வேண்டுமென்றும் அருகாமையில் சென்றனர். ஒருவன் மூட்டையை எடுத்து அவிழ்க்குங்கால், உறக்கத்திலிருந்து எழுந்தால் ஓரே வெட்டாய் வெட்டி வீழ்த்த, கையில் வாளை யேந்திக்கொண்டு, தலையின்புறம் இன்னொருவன் தயாராயிருந்தான். இவ்வாறு இக்கொலைபாதகர்கள் நினைக்குந் தறுவாயில் பசுவின் இளங்கன்று ஒன்று அவ்வழியே அதிவேகமாய் ஓடிற்று. அதை நோக்குற்ற திருடர்கள் யாராகிலும் கன்றைத் துரத்திக்கொண்டு பின்பற்றுவர் என்று ஓட்டம் பிடித்தனர். இவ்வளவு நடந்தும் ரகு ஆழ்ந்த நித்திரையிலிருந்து விழித்துக்கொள்ளவில்லை.

சிறிது நேரங்கழித்து விழித்துப் பார்த்து இங்கேயே படுத்து உறங்கிவிட்டோமே, இன்னும் நெடுந்தூரம் செல்லவேண்டுமே யென்று, உடனே தாமதிக்காமல் பிரயாணத்தை மேற்கொண்டு, சிறிது நேரத்திற்குள் அம்மான் அகம் போய்ச் சேர்ந்தான்.

ரகு வாழ்க்கையிலு மன்றி, இவ்வாறு நம் வாழ்நாட்களிலும் நம்மை அறியாமலே எவ்வளவோ நிகழ்ச்சிகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ரகுவுக்கு முதலில் காதலும்,—பிறகு இணையற்ற செல்வமும்,—கடைசியில் இறப்பும் வந்ததை அறிவானோ? என்னே நம் வாழ்நாள்! ஒவ்வொருவருக்கும் அவர்களுக்குந் தெரியாமலே செல்வமும், உவப்பும், இறப்பும் மாறி மாறி வந்துகொண்டிருக்கும் உண்மையை எவரே மறுக்க வல்லார்?

பரசுராம சித்த ஔஷதாச்ரமம்

திருவண்ணாமலை (N. A. Dt.)

நீடித்த வியாதிகளை, முப்பு குருவால் செய்த ஔஷதங்களால் நிவர்த்தி செய்யப்படும். டியூபர்குலோஸிஸ் என்ற க்ஷய ரோகத்திற்கும், நீரழிவு ரோகத்திற்கும் விசேஷ ஔஷதங்கள் இருக்கின்றன.

முப்புகுரு சேர்ந்த "சித்த எண்ணெய்"

இது சர்வரோக நிவாரணி, பரம சஞ்சீவி. ஒரு தடவை உபயோகித்தால் இதன் பெருமை தெரியும். அனேக டாக்டர்களால் பரிசீலனை செய்யப்பெற்றது. குழந்தைகள் பால் கட்டிகளுக்கும், ஈரல் கட்டிகளுக்கும் நிகரற்ற ஔஷதம்.

ஸோல் டிஸ்டிரிபியூடர்கள்:

ஸாரதா ஸ்டோர்ஸ், காரைக்குடி.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:

அப்பா அண்டு கம்பெனி, மதறாஸ்.

T. N. நாகலிங்கம் பிள்ளை, மதுரை.

மீனாக்ஷி ஸ்டோர்ஸ், தேவகோட்டை.

T. N. சொக்கலிங்கம் பிள்ளை, அண்டு சன்ஸ், மதுரை.

விஞ்ஞானமும், நந்தேச மொழிகளும்.

(கே. ஸ்ரீநிவாச கிருஷ்ணன். சிலோன்)

நாகரிக உலகத்தின் மற்றப் பாகங்களுடன் நம் பாரத நாடும் ஓர் நிலையில் விளங்கவேண்டுமானால், நந்தேசத்தவர்கள் விஞ்ஞான அறிவுள்ளவர்களாக வரவேண்டும். விஞ்ஞானமே இக்காலத்தில் ஒரு தேசத்தை முன்னணியிற் கொண்டு வைக்கின்றது. அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய நாடுகள் சீர்மல்கியிருப்பதன் காரணம் அத்தேசத்தின் விஞ்ஞான வளமே.

நந்தேசத்தில், கல்விக் குறைவினால் விஞ்ஞான வளர்ச்சிக்குப் போதிய இடமில்லாமலிருக்கின்றது. விஞ்ஞான நூல்கள் நந்தேச மொழிகளில் அதிகமாகப் பிரசுரிக்கப்படாததினால் ஆங்கில அறிவில்லாத பொது ஜனங்களுக்கு விஞ்ஞான வாசனையே யில்லாமற்போய் விடுகின்றது. ஆங்கிலம் படிக்கின்றவர்களிற் சிலரே விஞ்ஞானத்தை விசேஷப் பாடமாக எடுத்துப் படிக்கிறார்கள். அவர்களிற் சிலர் ஓரளவில் படிப்பை நிறுத்தி விடுகின்றதினால், விஞ்ஞானத்தில் போதிய அறிவுள்ளவர்களாக முடியவில்லை. மேலும் அவர்கள் ஜீவனோபாயத்திற் கலங்கி, படித்ததையும் மறந்து விடுகிறார்கள். கலாசாலையிற் படித்து உயர்ந்த பட்டம் பெற்றவர்களும், நியாயவாதிகளாகவோ, அல்லது அரசாங்க உத்தியோகஸ்தராகவோ வந்தால், தாங்கள் கற்ற விஞ்ஞானத்தைப் பயனுள்ளதாகச் செய்ய வியலாமலிருக்கிறார்கள். வைத்தியராகவாவது, உபாத்தியாயராகவாவது வருகின்ற மேற் படிப்பாளருக்கே விஞ்ஞானம் ஒருவாறு உபயோகப்படுகின்றது. அவர்களும் படித்ததை மறக்காமல் வைத்துக் கொணடிருக்கிறார்களே தவிர, மேன் மேலும் அறிவைப் பெருக்கும் வண்ணம் ஆராய்ச்சி செய்து, நூதன விஷயங்களைக் கண்டு பிடித்துப் புகழ்பெறுகிறார்களில்லை. ஆனால் அங்கங்கு ஓ'ரிராமன்'; ஓர் 'கிருஷ்ணன்', ஓர் 'போஸ்', ஓர் 'ராய்', ஓர் 'ஸாஹா', தோன்றியுள்ளார்கள்தான். அவர்களால் நம் பாரத நாடு விஞ்ஞான உலகத்தில் சிறப்படைந் திருப்பது பாராட்டத் தக்கதே. ஆயினும், விஞ்ஞான உணர்ச்சி பொது மக்களிடத்தே பரவவில்லை. பொது மக்களிடத்தில் அவ்வுணர்ச்சி யேற்பட்டால் ஆயிர 'மிராமர்'கள் விஞ்ஞான வுலகில் உதிக்கக் கூடும்.

பொது மக்களிடையே விஞ்ஞான அறிவு பரவாமலிருப்பதற்கு அயல் நாட்டு மொழியே காரணம். ஆங்கிலம், அல்லது யாதானுமொரு மேனாட்டு மொழியைக் கற்றாலன்றி நம்மவர்கள் விஞ்ஞான வழியைப் பெறவியலாமலிருக்கின்றது. நந்தேசத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களே நூற்றுக்கெட்டுப் பேர். அதில் ஆங்கிலம் கற்றோர் சிலர். அதிலும் விஞ்ஞான அறிவுள்ளவர் மிகவும் சிலரே. ஆகவே மேனாட்டவர்களைப்போல் விஞ்ஞான சம்பந்தமான தொழில்களில் நம்பாரத நாடு அபிவிருத்தியடைய நெடுங்காலஞ் செல்லுமென்றே சொல்லவேண்டி யிருக்கிறது. ஆகையால் விஞ்ஞான அறிவைப் பொது மக்கள் கூடியசீக்கிரத்தில் பெறுமாறு செய்ய வேண்டும். மேனாட்டில் வெளியாகும் விஞ்ஞான நூல்களை நம் பாரத நாட்டு மொழிகளில் பெயர்த்து எழுத வேண்டும். இந்தியா முழுவதற்கும் பொதுவான விஞ்ஞான பரிபாஷையிருப்பது நலமும் அவசியமும் ஆகும். அவ்வாறில்லாமல் நம் நாட்டில் வழங்கும் ஒவ்வொரு மொழியிலும் விஞ்ஞான பரிபாஷையை உண்டாக்குவதென்றால், அது வீண்பொழுது போக்கு என்றே சொல்லவேண்டும்.

விஞ்ஞான பரிபாஷை நம் பாரத நாடு முழுவதற்கும் ஒன்றாக விருக்கவேண்டுமென்றால், அது எம் மொழியில் இருக்க வேண்டுமென்பது ஆராயத்தக்கது. தேசீய உணர்ச்சி கிளர்ந்து வருமிந்நாளில், அப்பரிபாஷையை ஆங்கிலத்திலேயே வைத்துக் கொள்ள நம் பாரத மக்களின் மன மிடங் கொடாது. ஆயினும் ஆங்கிலத்திலேயே வைத்துக்கொள்ளுதல் ஒருவாறு நன்மை. எனெனில் பரிபாஷையை மொழி பெயர்க்க வீண்பொழுது போக்காமல், விஞ்ஞான விஷயங்களை மொழி பெயர்க்கலாம். மேலும் வழக்கில் பல ஆங்கிலச் சொற்கள் கலந்து வருகின்றன. உதாரணமாக, 'எஸ்டேட் மானேஜரும் நானும், ஹோட்டலுக்குப்

போய்க் காபி குடித்துவிட்டு டிராம் காரிலேறி ஹைகோர்ட்டுக்குச் சென்று கேஸைக் கவனித்தோம்' என்று சாதாரணமாக வழக்கத்திற் பேசுகிறோம். ஆதலால் ஆங்கிலத்திலுள்ள விஞ்ஞானச் சொற்கள் நம் மொழிகளில் கலந்து எளிதில் விளங்கக் கூடியதாக வந்து விடும்.

ஆயினும், விஞ்ஞான பரிபாஷைக்கு நம் மொழிகளிலேயே சொற்களைத் தெரிந்தெடுத்தலே முறை. அவ்வாறு தெளிந்தெடுப்பதற்கு நம் பாரத நாட்டு மொழிகளுள் இந்துஸ்தானியே சிறந்தது. பெரும்பாலான விடங்களில் இந்துஸ்தானியே வழக்கத்திலிருக்கிறது. அம் மொழியில் பரிபாஷையைச் செய்து கொண்டு, அம் மொழியிலும், மற்ற மொழிகளிலும் விஞ்ஞான விஷயங்களை மொழி பெயர்த்தால், எழுதப் படிக்கத் தெரிந்தவர்களெல்லோரும் விஞ்ஞான வறிவுள்ளவர்களாக வரக்கூடும்.

இந்துஸ்தானியில் உண்டாக்கும் விஞ்ஞான பரிபாஷையில் அதிகமாக ஸம்ஸ்கிருதச் சொற்கள், பாரஸீகச் சொற்கள் சேர வேண்டி வரும். மேனாட்டு மொழிகளிற் பல கிரீக், இலத்தீன் சொற்கள் வழக்கிலிருக்கின்றன. அதேபோல் பழைய மொழிகளான ஸம்ஸ்கிருதம், பாரஸீகம் இவைகளின் சொற்களாலேயே பரிபாஷையை உண்டாக்குவது நல்லது. மேலும் நமது தேசத்தில் வழங்கும் மொழிகளில் ஸம்ஸ்கிருதச் சொற்கள் கலவாத மொழியேயில்லை. ஜ்யோதிஷம், ஸங்கீதம் வேதாந்த சித்தாந்தங்கள், சிற்பம், வைத்தியம் முதலிய சாஸ்திரங்களில் ஸம்ஸ்கிருதச் சொற்கள் அதிகமாக வழக்கத்திலிருக்கின்றன. அவ்வாறே விஞ்ஞான பரிபாஷைச் சொற்களையும் வழக்கத்திலாக்கிக் கொள்ளலாம்.

இந்துஸ்தானியில் பரிபாஷையை நாம் ஆக்கிக் கொண்டோமாயின் ஆங்கிலத்தை முற்றும் ஒழிக்க முடியாது. ஏனெனில் மேனாட்டு விஞ்ஞானத்துடன் சம்பந்த மிருந்தாற்றான் இந்தியாவும், உலகமும் முன்னேற்ற மடையக் கூடியதாகவிருக்கும். ஸர். ஸி. வி. ராமன், ஜே. ஸி. போஸ் முதலியவர்கள் உலகப் பிரசித்த விஞ்ஞானிகளாக வந்ததற்கு ஆங்கிலமும் ஒரு காரணந்தான். மேனாட்டிலும் இந்நாட்டிலும் பிரசுரிக்கப்படும் விஞ்ஞானப் பத்திரிகைகளில், இவர்கள் செய்த ஆராய்ச்சிகளை வெளியிட்டதினாற்றான், உலகத்தின் மற்றப் பாகங்களுக்கு நந்தேச விஞ்ஞான சாஸ்திரிகளின் புகழ் பரவக்கூடியதாக விருந்தது. ஆகவே ஆங்கிலமும் விஞ்ஞான ஆராய்ச்சியாளருக்குத் தெரிந்திருக்கவேண்டியதவசிமாகிறது. அப்போதுதான் நம் நாட்டவர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா முதலியஇடங்களுக்குச் சென்று அவ்விடங்களில் விஞ்ஞானிகளுடன் சம்பாஷிக்கவும், மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரிகள் நம் பாரத நாட்டிற்கு வந்து நம் நாட்டவர்களுடன் அளவளாவவும் இயலும். ஆகவே நந் தேசத்தினருக்குக் குறைந்தது மூன்று பாஷைகளில் தேர்ச்சி தேவையாகும். தங்கள்மாகாணங்களில் வழங்குந் தாய்மொழி, அகில இந்தியப் பொது பாஷையாக வருகின்ற இந்துஸ்தானி, விஞ்ஞானத்திற்கு அவசியமான ஆங்கிலம், இம்மூன்றும் கற்க வேண்டும்.

மரியாதை செய்தல்

(ஏ. என். கல்யாணஸுந்திரம், எம். ஏ.)

(முன் தொடர்ச்சி)

ஹரிசங்கர் ஓர் 'பட' முதலாளி. அனேக படங்கள் 'சரியாக' ஓடாததினால் கவலை கொண்டு இராத் தூக்கமின்றி காலையில் எழுந்தார். சமையல்காரன் கொடுத்த 'காப்பி' மிகவும் ஆறிப்போயிருந்ததால், அதைச் சாப்பிடாமல் கொட்டிவிட்டு, கோபத்துடன் ஸ்நானம் செய்யச் சென்றார். தோட்டத்திலிருந்து ஒரு 'காளை மாடு' ஓடிவந்து அவரை முட்டிக் காயப் படுத்திவிட்டது. இந்த வலியைப் பொறுத்துக்கொண்டு ஸ்நானம் செய்து, உடை யணிந்து, 'அரைக்கோட்டை' (வெயிஸ்ட் கட்) மாட்டிக்கொண்டு ஹாலுக்குச் சென்றார். அங்கே அவர் மனைவி உமாலக்ஷ்மி, ஆபீஸ் மேஜையின் மேல் 'சக்கரைப் பொங்கலையும்', 'இட்டலியையும்' வைத்துக்கொண்டு சாப்பிட்டபடியே, ஹரிசங்கரை லக்ஷ்யம் பண்ணாமல் 'பாடிக்கொண்டிருந்தாள்'. இதைக் கண்ட ஹரிசங்கருக்கு ஒன்றும் புரியவில்லை. கனவோ என்ற சந்தேஹமும் உண்டானது 'மூக்குக் கண்ணாடியை' கழற்றி, துடைத்து மாட்டிக்கொண்டு மறுமுறை பார்த்தார். கோபம் பொங்கியது. 'அடியே' என்று ஒரு கூச்சல் போட்டார். உமாலக்ஷ்மி அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

ஹரி:—அடியே உனக்கென்ன கண் 'குருடாகிவிட்டதா' என்ன? நான் வந்திருப்பதைக்கூட கவனிக்காமல் அலக்ஷியம் செய்ய உனக்கு அவ்வளவு தைர்யம் வந்துவிட்டதா? கணவன் என்ற மதிப்பு............

உமா:—உஷ். போறும், இந்த 'ப்ரஸங்கம்'.

ஹரி:—காலையிலிருந்து இதுவரை 'உபவாஸம்' ஆகிவிட்டது. நீ என்னமோ?......

உமா:—உஷ். அது என் குற்றமா? வேண்டுமானால் வேலைக்காரனை 'தண்டனை' செய்கிறதுதானே.

ஹரி:—எனக்கு 'உபதேசமா' செய்கிறாய்.

உமா:—உங்களுக்கு 'மூளை' தான் இல்லையே. நான் என்ன செய்கிறது,!

ஹரி:—ஏண்டி 'எதிர்க்கவா' செய்கிறாய். உன்னை 'விலக்கிவிடுவேன்'. ஜாக்ரதை.

உமா:—அதற்கு முன்னாடியே நான் குடும்பத்திலிருந்து 'ராஜீநாமா' செய்துவிடமாட்டேனா என்று 'ஒரு ஸிக்ஸர்' அடித்தாள். (போடுபோட்டாள்)

ஹரி:—ஓஹோ அப்படியா சமாசாரம். உன்னை உடனே 'விவாஹ ரத்து' செய்துவிடுகிறேன் பார்.

உமா.—நான் மட்டும் சும்மா விடுவேனா. ஜீவனாம்சத்துக்கு உடனே 'வியாஜ்யம்' போட்டுவிடுவேன். ஞாபகமிருக்கட்டும்.

ஹரி:—போட்டால் என்ன.'ஒரு தம்பிடி'கூட கிடைக்காது. இந்த சமயத்தில் அவர்கள் பெண் வந்து "எனக்கு 'காவ்யம்' அர்த்தமாகவில்லை. சொல்லிக்கொடு" என்று ஹரிசங்கரைத் தொந்தரவு செய்தாள். கோபத்துடன் திரும்பிய ஹரிசங்கரின் 'தாடி' அவள் வளையில் மாட்டி பிழுக்க, வலி தாங்கமுடியாமல்,'தாடியை' வளையலிலிருந்து விடுவித்துக் கொண்டு பெண்முதுகில் ஆத்திரத்துடன் நாலைந்து 'அடி' கொடுத்துவிட்டு, அவளை 'கல்தா' கொடுத்தார். இதனால் கோபமும் ஆத்திரமும் தணிந்து, மனைவியுடன் 'ஸமாதானம்' செய்யத் தொடங்கினார். ஆனால் மனைவியோ 'பூர்ண ஸ்வதந்திரத்தை' விட்டு நகராமல், ஹரிசங்கரின் 'அரை

குறை' ஏற்பாட்டையும் அங்கீகரிக்காமல் 'தூக்கி யெறிந்துவிட்டாள்.' கடைசியில் வருத்தத்துடன் 'சொல்லிக்கொள்ளாமல் வெளிக்கிளம்பி' ஆபீஸுக்குச் சென்ருர்.

அங்காகிலும் அவர் கவலை ஒழிந்ததா. இல்லை. டைரக்டர் அவரிடம் வந்து கதாநாயகனின் 'பாட்டில்' கொஞ்சங்கூட 'தாளக்கட்டு' இல்லை என்று குறை கூறினர். கதாநாயகனே டைரக்டரிடம் 'டைரக்ஷன் திறமை' இல்லையென்று புகார் செய்தார். இதை அவர் 'சமாதானம்' செய்வதற்குள் மானேஜர் வந்து வேலைக்காரர்கள் 'ஸத்யாக்ரஹம்' செய்துவிட்டதாய்க் கூறினர். இவை போதாதென்று ஹரிசங்கர் மகன் 'மதம் மாறிவிட்டதாக' டெலிபோனில் செய்தியும் வந்தது. ஹரிசங்கர் ஒன்றும் புரியாது திகைத்து, இடி விழுந்தவர்போல் ஆஸனத்தில் அமர்ந்தார். மௌனத்தைக்' கைக்கொண்டு இம்மாதிரி கஷ்டங்கள் வரக் காரணம் என்னவென்று யோசிக்க ஆரம்பித்தார். எதிரிலுள்ள சுவற்றில் பிரசித்தி பெற்றவர்களின் படங்கள் சில மாட்டப்பட்டு இருந்தன. அதைப் பார்த்ததும் அவருடைய குற்றம் தெரிந்தது. அவர் குற்றம் என்ன? பிரசித்திபெற்றவர்களை 'அவமதித்து' 'மரியாதை' செய்யாததே.

விசேஷக் குறிப்பு:

இம்மாதிரி எழுதுவது சிலருக்கு வருத்தத்தையும் ஆத்திரத்தையும் உண்டாக்கலாம். வேடிக்கையாக எழுதப்பட்டிருந்தாலும் இது ஒருவரையும் அவமதிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் எழுதப்படவில்லை.

மேல்நாட்டில் வேடிக்கைப் படங்கள் (கார்டூன்) எழுதுவது மிகவும் சாதாரணம். அங்குள்ள பிரசித்திபெற்றவர்கள் அப்படங்களைப் பார்த்துக் கோபமோ வருத்தமோ கொள்ளாமல், தங்களை மரியாதை செய்ததாகவே எண்ணுகிருர்கள். நம் தேசத்திலும் இதை சங்கர், மாலி முதலியவர்கள் பின்பற்றியபொழுது சிலருக்குக் கோபம் உண்டாகியது. ஆனல் கடைசியில் இதில் ஒரு தவறுதலும் இல்லை என்று அவர்களே உணர்ந்து, மேன்மேலும் இம்மாதிரியான படங்களின் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்படியான குதூஹலம் அவர்களுக்கு உண்டாகிவிட்டது. இதைப்போலவே அனைவரும் நான் எழுதியிருப்பதை விபரீதமாக எண்ணிக்கொண்டு ஆத்திரப்படாமல் உண்மை நோக்கத்தை உணர்ந்து இதைப் படித்து சந்தோஷித்து மேன்மேலும் இம்மாதிரியான கட்டுரைகள் வெளியாவதை ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள் என்று நம்புகிறேன்.

யுத்தம்! யுத்தம்!! யுத்தம்!!!

ஹிட்லர்தான் காரணமா?

உண்மையை அறிய விரும்பினல்

"ஹிட்லரும் மஹாயுத்தமும்"

என்று ஏ. ஜி. வெங்கிடாச்சாரி எழுதிய ஓர் அறிய யுத்தப் புதிர் விளக்கும் புஸ்தகத்தை வாங்கி வாசிக்கவும்.

கிடைக்குமிடம்:— பாரதமணி காரியாலயம்.



கர்வ பங்கம்

(சி. லக்ஷ்மி நாராயணன் பி. ஏ.)

ஒரே ஒரு ஊரில் ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு ஒரு பெண் இருந்தாள். அவள் அழகு வாய்ந்தவள். படிப்பிலும் நல்ல தேர்ச்சி பெற்றவள். ஆனால் மஹா கர்வி. அவளை ஒரு அழகு வாய்ந்த ராஜ குமாரனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டுமென்பது அரசனது விருப்பம். அதற்காக ஒரு சுபதினத்தில் எல்லா தேசத்து ராஜ குமாரர்களையும் வரவழைத்தான். ஆனால் ராஜகுமாரியோ ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு குறை சொல்லி, கல்யாணஞ்செய்து கொள்ள மறுத்து விட்டாள். அவளது அழகைக் கேள்வியுற்று ஆசையுடன் வந்த ராஜ குமாரன் ஒவ்வொருவனும் வெட்கமடைந்து வருத்தத்துடன் தன் நாட்டுக்குத் திரும்பிச் சென்றான்.

அரசனுக்கு ஒரு புறம் கோபமும் ஒரு புறம் வருத்தமும் ஏற்பட்டது. தனக்கு ஒரே குமாரியாதலால் அவளைக் கோபித்துக் கொள்ள அவன் மனம் இசையவில்லை. இருந்தாலும் மற்ற தேசத்து ராஜ குமாரர்களையெல்லாரையும் அவமானப் படுத்தியதை நினைத்து மிகவும் வருந்தினான். பின் தன் குமாரியை அழைத்து, ''நீ உன் இஷ்டம்போல் உன் மனதுக்கிசைந்த ராஜகுமாரனைகல்யாணஞ் செய்துகொள்'' என்று கூறிவிட்டுத் தான் காசியாத்திரை சென்றான்.

ராஜ குமாரியோ முன்னிலும் பன்மடங்கு கர்வம் கொண்டாள். தன் அழகுக்கு நிகர் ஒருவருமில்லை என்று அவள் எண்ணம். ஒருநாள் சாயங்காலம் மணி ஐந்து இருக்கும். எங்கும் மஞ்சள் வெய்யல், ஜிலு ஜிலு வென்று காற்று வீசிக் கொண்டிருந்தது. ராஜகுமாரி தன் மாளிகையின் மேல் மாடியில் உட்கார்ந்து கொண்டு ரஸ்தாவில் நடமாடும் ஜனங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அன்று வரை அவள் பார்த்திராத ராஜகுமாரன் ஒருவன் அவள் மாளிகை வாசலில் நின்று கொண்டிருந்தான். தற்செயலாக அவன் ஏறிட்டுப் பார்க்கும் சமயம் அவளும் அவனை உற்று நோக்கினாள். அவ்வளவுதான் அழகில் ஈடுபட்டு அவன்மீது காதல் கொண்டாள். இருந்தாலும்தான் இறங்கிச் செல்லாமல், ஒரு துண்டுக் கடிதத்தை அவனை நோக்கி வீசி எறிந்தாள். ராஜகுமாரனும் அதைப்பார்த்தான். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பின் அதைக் கையில் எடுத்துக்கொண்டு நடந்து சென்றான்.

வழியில் ஒரு முடவன் 'ஐயா, பசி' என்று கத்திக்கொண் டிருந்தான்.

அவ்வழியே சென்ற ராஜகுமாரன், ஞாபகமின்றி, அக்கடிதத்தை நழுவவிட்டுச் சென்ருன். அதைக் கண்டு எடுத்த முடவன், ஆத்திரத்துடன் பிரித்துப் பார்த்தான். கல்வி கற்றிருந்தாணுகையால் விஷயத்தை அறிந்துகொண்டான். பின் மெதுவாக அரண்மனையை நோக்கி நடந்து சென்ருன்.

இரவு மணி 9 இருக்கும், எங்கும் நிசப்தமாயிருந்தது. அரண்மனைக் கடுத்த நந்தவனத்தில் புகுந்து, அங்கு போடப்பட்டிருந்த பளிங்குக் கல்லின்மீது உட்கார்ந்தான் முடவன். சிறிது நேரத்தில் புன்முறுவலுடன், கையில் பூமாலை ஏந்தி, சந்தோஷத்துடன் வந்தாள் ராஜகுமாரி. வந்தவள் முடவனைக்கண்டதும் ஆச்சரியம் கொண்டாள். அவளுக்கு ஏற்பட்ட வெட்கமும் வருத்தமும், அவளால் தாங்கமுடியவில்லை, இவனையா மணப்பது என்று பெருமூச் செறிந்து, வருத்தம் தாங்கமாட்டாது தற்கொலை புரிந்து கொண்டாள். ஐயோ பாவம், தன் மகள் இறந்த செய்தியைக்கேட்ட அரசனும் உயிர்துறந்தான்.

சினிமாச் சுருள்

சந்திரகுப்தன், சாணக்கியன் என்ற இருவர்களும் கி. மு. 321-ல் முறையே அரசனுகவும், மந்திரியாகவும் வட இந்தியாவில் அரசாண்டதாகச் சரித்திரம் சொல்லுகிறது. அது வாஸ்தவம்தான் என்று நிலைநாட்டுவதுபோல், அவ்வாட்சியை டிரினிடி தியேட்டர்ஸார்கள், படமூலமாய்ப் பண்டை காலத்தில் நம் மன்னர்கள் எவ்வாறு அரசாட்சி நடத்தினர் என்றும், அதற்கு சாணக்கியன் என்ற பிராம்மணன் எவ்வாறு மந்திரியாயிருந்து ஒத்தாசை புரிந்தான் என்றும், சித்தரித்துக் காட்டும் வேலையில் முனைந்திருப்பதாய்த் தெரியவருகிறது. கல்கத்தா காளி பிலிம்ஸில், சந்திரகுப்த—சாணக்கியனை, ஸ்ரீ. ஸி. கே. சாச்சியின் மேல் பார்வையில் தயாரிக்கப் போகிருர்கள் எனவும் தெரிய வருகிறது.

சீதாதேவியின் கர்ப்பவாசகாலம் இன்னும் கொஞ்சகாலந்தானென்றும், கூடிய சீக்கிரம் சினிமா உலகத்தில், ஜனனமாகி விடுவாளென்றும், சினிமாப் பிரியர்கள், எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில், ஜெர்மன் குண்டுதான் கர்ப்ப சிதைவிற்குக் காரணமாயிருக்குமோ என்று ஊகிக்கும் வண்ணம், "படப்பிடிப்பு ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது" என்ற செய்தி சினிமாப் பிரியர்களின் ஆனந்தத்தில் ஒரு டிகிரியைக் குறைத்துவிட்டது. ஆனுல், அதே சமயத்தில் கூடிய விரைவில் பிராட்டியானவர் வெளியாவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை சியாமளா பிச்சர்ஸார், செய்து கொண்டிருக்கிருர் களென்பதைக் கேட்க அதிக ஆனந்த முறுவார்களென்பதில் சந்தேகமில்லை. சீதா ஜனனம் தடைப்பட்டபோதிலும் மலையாள ஞானம்பிகை. கூடிய விரைவில் நம்முன் தோன்றுவாளாம்.

தொடர் கதை

மளிகைக்கடை மாணிக்கம் செட்டி

(ஜி. பாலசுப்பிரமண்யம்)

மாணிக்கம் செட்டியார் :—தாங்கள் சொல்வது எனக்கு முற்றிலும் திருப்தியாய்த்தானிருக்கிறது. அம்மாதிரி ஒழுங்காய் வட்டி கிடைத்துவிட்டால் தர்ம காரியம் வெகு நன்ருய் நடத்தக்கூடும். ஆனல் ஒரு சந்தேகம். என் பேராலேயே பல கணக்குகள் திறந்து கொண்டால் பாங்கர்களுக்குத் தவறுதலாகக் கணக்கு எழுதுவதற்கு இடம் கொடுத்து விடுமே, பின்னல் ஏதாவது தகரார் வராமலிருக்கவேண்டுமே. என்றுதான் பயப்படுகிறேன்.

இராமலிங்க அய்யர் ;—அதைப்பற்றிக் கொஞ்சம்கூட தாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. என் சொந்த முறையில் கணக்கிருக்கிறது. நான் பள்ளிக்கூட கமிட்டி காரியதரிசி என்கிற முறையில் ஓர் கணக்கு வைத்துக் கொண்டிருக்கிறேன். இதைத்தவிர என் வீட்டுக் குடித்தனச் செலவுக்காகவென்று மாதாமாதம் ரூ 150. தனியே எடுத்து அதற்காக என் சம்சாரத்தின் பேரிலும் சேர்ந்து ஓர் கணக்கு வைத்திருக்கிறேன். அந்த கணக்கில் நானும் கையெழுத்துப் போட்டு தொகை வாங்கலாம். நான் இல்லாத சமயம் ஏதாவது வீட்டுச் செலவுக்காகப் பணம், தேவையாயிருந்தால் என் சம்சாரமும் கையெழுத்து செய்து வேண்டிய பணத்தை வாங்கிக்கொள்வாள். ஒன்றுக்கொன்று கலப்பதற்கு இடமே இல்லை. அந்தந்தக் கணக்குக்காக தனித்தனி செக் புஸ்தகம் கொடுக்கப்படும். அந்தந்தக் கணக்கில் தொகைகளை வாங்க, அவற்றிற்காகக் கணக்கில் தொகைகளைத்தான் நாம் உபயோகிக்க வேண்டும். ஒரு கணக்கில் பணம் வாங்குவதற்கு வேருெரு கணக்குக்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் செக்கை உபயோகித்தால் அந்தச் செக்கானது நமக்கே திரும்பி வந்துவிடும். பணம் கிடைக்காது.

மாணிக்கம் செட்டியார் :—சரி அப்படியானல் நான் நாளைதினம் மூன்று அல்லது நான்கு கணக்குத் திறந்துகொள்ளலாமென்று எண்ணியிருக்கிறேன். நெல்விற்ற பணத்தையும் வாடகைப் பணத்தையும் தனியாக ஓர் கணக்கில் போட்டுவிடுகிறேன். கொட்டையூரிலுள்ள என் சொந்தக் கடைக்காக ஓர் கணக்குத் திறக்கவேண்டும். தர்மக் கணக்குத்தான் ஒன்று இருக்கிறது. நமது பையன் கல்யாணத்தின்போது அவனுக்காக அவன் மாமன் வீட்டிலிருந்தும், மற்ற என் சினேகிதர்களிடத்திலிருந்தும் பரிசாகக் கொடுக்கப்பட்ட பணம் தனியே வைத்திருக்கிறேன், அதை அவன் பேராலேயே போட்டுவிடுகிறேன். ஆகையால் எனக்குக் காலையில் நான்கு மனு பாரங்கள் கணக்குத்திறந்து கொள்வதற்கு அனுப்புங்கள்.

இராமலிங்கம் அய்யர் —நல்லது நான் அப்படியே செய்கிறேன். நான்கூட என் மகன் பேரால் ஓர் கணக்கு நாளைதினம் திறந்து கொள்ளப்போகிறேன்.

மாணிக்கம் செட்டியார் :—நான் எல்லாவற்றையும் நாளையதினம் பண்ணை அய்யரவர்களிடமும் கலந்துகொண்டு இங்கு வரும் போது பணத்தோடு வந்துவிடுகிறேன்.

மாணிக்கம் செட்டியார் :— தாங்கள் தங்கள் பெண்பேரில் ஓர் கணக்குத் திறக்கப்போவதாகச் சொன்னீர்களே. தங்கள் பெண் மைனர் அல்லவா. அந்தக் குழந்தை பேரில் கணக்குப் போட்டுக்கொள்ள பாங்கர்கள் சம்மதிப்பார்களா ?

இராமலிங்க அய்யர்:—மைனர் தான், மேஜர் ஆவதற்கு இன்னும் ஒரு வருஷம் தானிருக்கிறது. இப்போது நான் அந்தக் குழந்தைக்கு கார்டியன் என்ற முறையில் அவள் பேரால் பணத்தைக் கட்டிவிடுவேன். சமீபத்தில் குழந்தைக்கு சாந்திக் கலியாணம் நடக்கப்போவதால் அவளுக்கு நல்ல நகை ஏதாவது வாங்கி அந்த சமயத்தில் ஒதியிடவேண்டும், அதற்காகத்தான் அந்தப் பணம் தனியாக வைத்திருக்கிறேன். கையில் இருந்தால் செலவழிந்து போய்விடும். நான் ஒவ்வொன்றிற்கும் பிரத்யேகமாய்க் கணக்குவைத்துக்கொள்வது வழக்கம். அந்தந்தக் கணக்கிலிருந்துதான் அவை சம்பந்தமானசெலவுகளுக்குப் பணம் வாங்கிச் செலவிடுகிறது. ஒன்றுக்

கொன்று கலந்துகொள்ள நானே இடம் கொடுக்கமாட்டேன். அந்தக் கணக்கில் போது மான பணம் இல்லாவிடில் அதற்கு வேறு தனியே ஏதாவது ஏற்பாடு செய்வேனேயன்றி மற்ெருரு கணக்கிலிருந்து, அந்தக் கணக்குக் காகப் பணத்தை வாங்கிச் செலவிடமாட் டேன்.

மாணிக்கம் செட்டியார் :—“அது மிகவும் உசிதமான காரியம். நமது நாட்டுப் பெண்ணுக் காகக்கூட நகை செய்வதற்கு என்று என் னிடமும் சொல்ப தொகை சேர்ந்திருக்கிறது. என் தமக்கை அந்தப் பெண்ணுக்குக் கொடுத்தது, என் சம்சாரம் கொடுத்தது, இவைகளெல்லாம் அந்தப் பெண் என்னிடமே சேர்த்து வைத்துக்கொண்டு தனக்கு ஏதாவது நகை செய்யவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறது, நானும் அதோடு கொஞ் சம் தொகை சேர்த்து தாங்கள் செய்வதாக உத்தேசித்திருப்பதுபோல் பாங்கில் அந்தப் பெண்பேரிலேயே ஓர் கணக்குத் திறந்து கொள்கிறேன் சாவகாசமாய் வாங்கிக் கொள் கிறேன்.

இராமமங்கர் அய்யர் :—“அப்படியே செய்யுங்கள். இப்போது மணி 6 அடிக்கப் போகிறது. வேலையும் இன்று எல்லாம் முடிந்திருக்குமென்று எண்ணுகிறேன். எனக்கு உத்தரவு கொடுக்கிறீர்களா? ராமு டுவை இன்று நான் அழைத்துப்போகலாமா” என்று கேட்டார்.

மாணிக்கம் செட்டியார் அதற்குச் சம்மதித் ததன்பேரில் ராமுடுவை அழைத்துக்கொண்டு இராமலிங்க அய்யர் வீடுசென்ருர். மாணிக்கம் செட்டியாரும் அவர் மகன் குப்புடுவும் ஆபீ ஸைப் பூட்டிக்கொண்டு ஊர் சென்ருர்கள்.

அத்தியாயம் 4

அன்று மறுதினம் காலையில் பண்ணை கோவிந்தய்யரிடம் மாணிக்கம் செட்டியார் வந்து தான் பாங்கில் கணக்குத் திறந்து கொள்ள யோசனை செய்துகொண் டிருக்கிற விஷயங்களைப் அவரிடம் சொல்லி அவர் அபிப்பிராயத்தையும் தெரிந்து கொண் டார். பண்ணை கோவிந்தய்யருக்கு அதிக மாய் பாங்க் நடவடிக்கைகளில் பரிச்சியமில்லா மலிருந்தாலும், பாங்க் நடத்திவரும் டைரக்டர் களை இவருக்கு நன்ருய்த் தெரிந்திருந்தபடி யாலும், நல்ல லோகானுபவத்தினுல் சரியாகப் பகுத்தறிவு செய்ய யோக்கியதையுள்ளவராகை யாலும், செட்டியார் யோசனை மிகவும் உத்தம மானது என்று தீர்மானித்தார்.

இப்படி பண்ணை கோவிந்தய்யரிடம் செட் டியார் பேசிக்கொண்டிருந்ததை எல்லாம் கோவிந்தய்யர் சம்சாரம் கேட்டுக்கொண்டே யிருந்தாள். செட்டியார் திரும்பித் தன் வீடு சென்றவுடன் கோவிந்தய்யரிடம் அவர் சம்சா ரம் வந்து பின் வருமாறு கேட்டாள்.

“செட்டியார் சொன்னவைகளெல்லாம் உள் ளிருந்து கொண்டு நான் கேட்டுக்கொண் டிருந்தேன். நமது பணம் அவரிடம் இருக் கிறதே, தன்னிடத்திலுள்ள பணத்துக்கு மாத்திரம் தனித்தனியாகக் கணக்குத் திறந்து கொள்ளப் போவதாய்ச் சொன்னுரே. நமது பணத்தைப்பற்றி ஒன்றும் கேட்கவில்லையே” என்ருள்.

கோவிந்தய்யர் :— “நம்மிடத்தில் பணத்தை வாங்கி அவர் பெட்டியிலேயே பூட் டிவைத்திருப்பாரென்று நினைத்தாயோ. அப் படித் தனியே அவர் பெட்டியில் நம் பணம் தூங்குவதானுல் நமக்கு அவர் என்னமாய் வட்டி கொடுக்கக்கூடும். நம் பணத்தைக் கொண்டு அவர் வியாபாரத்திற்கு வேண்டிய சரக்குகள் வாங்கி அதில் சொல்ப லாபம் கிடைப்பதனுல்தான் நம் பணத்தை அவர் வைத்துக் கொண்டிருக்கிருர். இல்லாவிடில் நம்மிடமேஅதைக் கொடுத்துவிட்டிருக்க மாட் டாரா.”

கோவிந்தய்யர் சம்சாரம். “வியாபாரத்துக் குத்தான் எல்லோரும் சேர்ந்து ரூ 50,000 வரையில் முதல் போட்டிருக்கிறீர்களே, அதை யன்னியில் செட்டியாரிடம் உபரியாய் ஏராளமான தொகை கையிலிருப்ப தென்றும் அதைத் தன் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவர் பேரிலும் பாங்கில் கணக்குத் திறந்து அதில் போட்டுவிடப் போவதாகச் சொன்னுரே. அப்படியிருக்க, நம்முடைய பணம் அவருக்கு எதற்காக. அதனுல்தான் எனக்கு சந்தேகம் வந்து தங்களைக் கேட்கலாமென்று தோன் றிற்று.”

கோவிந்தையர் :-“நீ சொல்வது சரிதான் ஒரு கால் நம்மிடம் பணத்தைத் திருப்பிக் கொடுத்தால் நாம் ஏதாவது மனஸ்தாபப்பட் டுக் கொள்வோமோ என்ற எண்ணமும் செட்டியாருக்கு இருக்கும். இதை அவரிடம் எப்படிக் கேட்பது. அடுத்த மாதம் பைய னுக்கு சாந்திக் கல்யாணம் செய்வதாக உத் தேசித்திருக்கிருேமல்லவா; அப்போது அது சம்மந்தமாயப் பணம் வேண்டுமென்று கொஞ்

சம் தொகை வாங்கிக் கொள்வோம். அந்த சமயத்தில் அவர் ஏதாவது சொல்லுகிறாரா பார்ப்போம்.

கோவிந்தையர் சம்சாரம் :—சாந்திக் கல்யாணச் செலவுக்கு செட்டியாரிடம் மொத்தமாகச் சேர்ந்திருக்கும் ரூ. 20,000 த்தி லிருந்தா கொடுக்கும்படி கேட்கப்போகிறீர்கள், அது ஒரு முதலாக விருக்கக்கூடாதா.

கோவிந்தையர்:-" ரூ. 20,000 மாத்திரம் தான் அவரிடம் தங்கியிருக்கிற தென்று நினைத்துக் கொண்டிருக்கிறாயோ. சென்ற வாரம் கூட நமக்கு அடுத்த வருஷத்திற்காக விதைக்கு வேண்டிய நெல்லைத் தனியே வைத்துவிட்டு உபரியாயிருந்த 150 கலத்தையும் விற்கச் சொல்லி அவரிடம் நமது கணக்கில் வரவு வைத்துக்கொள்ளும்படி யனுப்பினேன். அதற்கு முன்னமேயே 600 ரூபாய் சொச்சம் நம் பேரால் அதிகமாகவே இருந்தது. ஆகையால் ரூ. 20,000 த்தைத் தவிர ரூ. 800க்கு மேல் அவரிடம் இருக்கும். எனக்குக் கணக்குத்தெரியாது என்று எண்ணுதே. நானும் அந்த ரூ. 20,000மும் ஓர் முதலாயிருக்கவேண்டும் என்றுதான் எண்ணம் கொண்டிருக்கிறேன்.

கோவிந்தையர் சம்சாரம் :—என்னமோ எனக்குத் தோன்றியதை சொன்னேன். தங்கள் பேரிலும் பாங்கில் ஓர் கணக்கு ஏற்படலாமென்று எண்ணினேன்.

கோவிந்தையர் :- அப்படியே செய்வோம். இராமலிங்க அய்யரையும் கலந்துகொண்டு நமக்கும் செட்டியாருக்கும் யாதொரு மனஸ்தாபத்துக்கும் இடமன்னியில் பக்குவமாய் அவரிடம் விஷயங்களைச் சொல்லி வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிடுவோம். நம் குழந்தையும் விஷயங்கள் தெரிந்து கொண்டிருக்கிறான். அவனையும், நாம் இது சம்மந்தமாய்க் கலக்க வேண்டியது அவசியம். அவனுக்கு இப்போது தக்க வயது வந்துவிட்டது. குடும்ப நிர்வாகத்தை நான் அவனிடம் ஒப்பித்து விட்டு ஆத்மார்த்தமான விஷயங்களில் என் பாக்கிக் காலத்தைத் தீவிரமாகச் செலுத்திவர ஆவலுள்ளவனு யிருக்கிறேன். நமது நாட்டுப் பெண்ணும் நல்ல புத்திசாலி என்று தோன்றுகிறது. முன் அந்தக் குழந்தை இங்கு வந்திருந்தபோது அவள் நடந்துகொண்ட மாதிரியில் அவள் நல்ல குணமுடையவள் என்றும் விஷயங்கள் நன்றாகத் தெரிந்து இருக்கிறாள் என்றும் நான் அறிந்துகொண்டேன்.

கோவிந்தய்யர் சம்சாரம் : நீங்கள் அதை மாத்திரம்தான் தெரிந்து கொண்டீர்கள்' அந்தக் குழந்தை என்னை "அம்மா, அம்மா". என்று கூப்பிட்டுக்கொண்டு எனக்கு வேண்டிய சிசுருஷைகளைச் செய்து கொண்டும் உள்ளே சமயலுக்கு வேண்டிய சாமான்களை எடுத்துக் கொடுத்துக்கொண்டும் மிகவும் புத்திசாலித்தனமாய், நடந்துகொண்டிருந்தாள். என்னை எழுந்திருக்கவே விடுகிறதில்லை. சோம்பலில்லாமல் வீட்டு வேலைகளைத் தானே கவனித்து வந்தாள். பகல் நேரங்களில் எனக்கு பாகவதத்தை வைத்துக்கொண்டு வாசித்துக் காட்டினாள். வெகு நன்றாய் வாசித்தாள். பகவத்கீதை, ராமாயணம், விஷ்ணு புராணம், பாகவதம் இந்த புஸ்தகங்களெல்லாம் அவள் கையிலேயே கொண்டு வந்திருந்தாள். எப்போதும் அந்த புஸ்தகங்களை மத்தியான நேரங்களில் அவள் வாசித்துக் கொண்டிருப்பாளாம். வீண் வம்பே பேசுவதில்லையாம். அவள் அத்தை என்னிடம் சொன்னாள். எனக்கு அவள் பெண் மாதிரியே இருந்தாள். புதிதாக வந்தோமே என்ற சங்கோஜமில்லாமலும், மரியாதையில் ஓர் குறைவுமன்றி என்னுடன் வெகுகாலம் பழகினது போல் பழகிவந்தாள். கடவுள் அவளுக்கு தீர்க்காயுசு கொடுத்து நம் பையனையும் அவளையும் சந்தோஷமாய் நீடூழி காலம் வாழ்ந்து கொண்டிருக்க அருள்புரிவாராக.

கோவிந்தய்யர் : நாம் செய்த பூஜாபலனாக நமக்கு சத்புத்திரனும் நம் மனதுக்கேற்ற நாட்டுப் பெண்ணும் கிடைத்திருக்கிறார்கள். அவர்கள் க்ஷேமத்தைத் தவிர நமக்கு இகத்தில் ஆக வேண்டியது ஒன்றுமில்லை நாம் பரலோக சாதகமான காரியங்களைக் கவனிக்க அவ் விருவரும் நமக்கு அனுகூலமாகவிருப்பார்கள்.

சுப்ரமண்ய பாரதி

சுப்பிரமண்ய பாரதி தற்காலம் இந்தியாவுக்குச் செய்திருக்கும் கவித்தொண்டு நம்மால் சொல்லத்தரமன்று. அவர் தமிழைத் தற்கால நிலைமைக்குகந்தவாறு செம்மைப்படுத்தியவர்; தமிழிலே ஓர் தனி அழகையும், தனி வீரத்தையும் தனி நடத்தையையும் சிருஷ்டித்தவர். அவருடைய கீதங்களைப் படிக்குந்தோறும் நம்முடைய மனதில் அவருடைய வீரஞ்செறிந்த உருவம் தோன்றாமல் இராது. நாம் நம்மையே மறந்து அவருடன் லயித்துவிடுகிறோம். வீரம் கலந்த ஓர் சக்தி நம் உடலில் ஊடுருவிச் செல்கின்றது.

பாரதி பாரதமாதாவின் தூதர். "தற்காலத்தில் நாம் தேவதூதர்களைக் கல்லால் அடிப்பதற்குப் பதிலாக அவர்களை ரோஜாப் புஷ்பங்களால் அர்ச்சிக்கிறோம்" என செஸ்டர்டன் என்ற பெரியார் கூறினார். பாரதி இருந்த காலத்தில் கல்லால் அடிக்கமாட்டாக் குறையாக அவரை இழிவுபடுத்தினோம். மனச்சாந்தியுடன் அவர் காலத்தைக் கழிக்க நாம் அவரை விடவில்லை. உண்ண உணவின்றியும், உடுக்கத் துணியுமின்றியும், உறங்க இடமின்றியும் தத்தளித்தார். அச்சமயம் யாராவது ஏதாவது கடுகளவாவது உதவி செய்தார்களா? ஆனால் அவர் ஒரே தூக்கமாகத் தூங்கிப் போனபிறகு அவருடைய இணையிலாக் காவ்யங்களையும் கட்டுரைகளையும் படித்தும் கேட்டும் அவரைப் புகழ ஆரம்பிக்கிறோம்.

"பாஞ்சாலி சபதம் என்னும் காவ்யம். மற்றக் காவியங்களைப்போல என்றும் அழியாப் பொருளாக இருக்கின்றது. அவருடைய கீதங்களெல்லாம் தமிழனைத் தட்டி யெழுப்பி, அவனுடைய நெஞ்சில் சுதந்திர உணர்ச்சியை ஊட்டியதை யாரால் மறுக்க முடியும்? இந்த, தேச ஆண்களுக்காகட்டும் பெண்களுக்காகட்டும் இதுவரையிலும் எப்பாடலும் உண்டாக்காத ஓர் தனி சக்தியை உண்டாக்கி சுதந்திர ஞானத்தைப் புகட்டியது அவர் கீதங்கள். பாரதி கீதங்கள் மனிதனைத் தூக்கத்தினின்றும் தட்டி யெழுப்பின. ஒவ்வொரு ஆத்மாவினுடைய இருதயத்தைத் துள்ளச்செய்தன. பாரதியின் வசன நடையோவெனில் செய்யுள் நடையின் புகழைச் சம்பாதிக்கவில்லை. சிறு கதைகள் எழுதினார். மனிதனின் பரந்த நோக்கம் அதிலிருக்கின்றது. ஆனால் அதைக் கையாண்டது சிறு கதை இலக்கணத்தைத் தழுவியதல்ல.

பாரதி தமிழர்களுக்கு சுதந்திரத்தைப் புகட்டியது மன்னியில், சக்தியையுடைய ஓர் செய்யுள் நடையையும் தமிழ் எழுத்தாளர்களுக்கு நிதியென வைத்திருக்கின்றார். ஆனால் தற்காலத்துக் கவிகள் அவர் நடையில் தன்னுடைய ஜீவனையும் லயிக்க வைக்காமல் அப்படியே பின்பற்றிச் சென்று உபயோகமற்ற பாடல்களைப் பாடித் தள்ளுகின்றனர். அப்பாடல்களில் சக்தியும் இல்லை, ஜீவனும் இல்லை.

"தேசபக்தி ஓர் அயோக்கியனுடைய கடைசி அடைக்கலம்" என்று சொல்வார்கள். ஆனால் அத் தேசபக்தியே ஓர் கவியின் முதல் அடைக்கலம் என்றால் பரிதாபப்படவேண்டியது. அதேபோல அவருடைய சொல்லருமையும், அர்த்த புஷ்டியுள்ள அவர் பாடல்கள் சில நாட்கள்வரை உயர் புகழை நாடிச்சென்று பின்பு புறக்கணிக்கப்படுகின்றன.

பாரதி கனவுகள் கண்டார், பரமாத்மாவின் தரிசனங்கண்டார், அவருடைய கனவுகள்பலிக்குங்காலம் வந்துவிட்டது. பாரதி வைத்துவிட்டுப்போனஆஸ்தி தமிழ்இலக்கியங்களில்உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. ஆகையால் நாம் அவருக்குச் செய்யவேண்டிய கடமை என்னவென்றால் நாமெல்லோருஞ் சேர்ந்து தமிழை மேன்மேலும் விருத்திசெய்ய வேண்டியதுதான்.

ஸ்ரீனிவாஸ கிருஷ்ணமூர்த்தி.